ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை | உள் நாடு 0-1-0 | வெளி நாடு 0-1-6

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	—	ரூ 3—0
6 மாத சந்தா ,,	—	,, 1 12
வெளிநாட்டிற்கு ,,	—	,, 4—0

வாரப்பதிப்பு

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம்: அங். 1க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | சென்னை, சுக்கில௵ கார்த்திகை௴ 23௳ (8—12—29) ஞாயிற்றுக்கிழமை | மலர் 31

சென்னை, திருச்சி, மதுரை, கொழும்பு முதலிய பல இடங்களில் நடைபெற்ற வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண்காட்சிகளிலும், அரசாங்க அதிகாரிகளாலும் பரீட்சிக்கப்பட்டு முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்க பதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்மம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்ற பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்

(ஓர் யோகீஸ்வரரின் அநுபவ முறைப்படி தயார் செய்யப்பட்டது)

உலகப் பிரசித்தி பெற்ற

மகா சந்தனாதி தைலம்

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்த தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேகநீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருதலை நோய், பீனிசம், காதிரைச்சல், காது மந்தம், மண்டை குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டை சூடு, தேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

ஒருமுறை இந்த தைலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றயர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒருமுறை பரீட்சித்துப் பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4. 12 அவுன்ஸ் டின் ரூ. 2-2-0.

சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து

கைகால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொப்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விருத்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும், சுறுசுறுப்பையும் உண்டாக்கும். எவ்வளவு கடின வேலை செய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0.

மகா வில்வாதி லேகியம்

அஜீரணம், வயிறுப்பிசம், புளியேப்பம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊறல், நெஞ்செரிவு, வாந்தி, தலை சுற்றல், வயிற்று வலி, அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், க்ஷயரோகம், மயக்கம், கைகால் குடைச்சல் முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீரண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்க வேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு தொந்தரவுகளையும் போக்கும்.

பலவித பழச்சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது. பாலர் விருத்தாப்பியர் யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

குழந்தை மருந்துகள்

கோரோஜனை மாத்திரை பாட்டில் அணா 8. கஸ்தூரி மாத்திரை பாட்டில் அணா 8. வட்டுவாதி மாத்திரை அணா 8. கார மாத்திரை அணா 8. சுகபேதி மாத்திரை அணா 8. கரப்பான் எண்ணெய் ரூ. 2-0-0. மாந்தக் குடோரி எண்ணெய் ரூ, 1-0-0,

இன்னும் எல்லாவித நோய்களுக்கும் மிகவும் குணமுள்ள மருந்துகள் கிடைக்கும்.

எல்லா மருந்துகளுக்கும் பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்ப வேண்டும். விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜெண்டுகள் தேவை.

டீ. சி. சிங்காரம் அண்டு கோ.,
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

விளம்பரம்

மேயோ கூற்று மெய்யா-பொய்யா?

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற திருவள்ளுவர் வாக்கை உணர்ந்தீர்களா?

எனின், ஏன் வீண்வாதம்?

மேயோவின் நோக்கம் கொடியதேயாயினும் அவர் கூறியுள்ள குறைகளும் கொடியவைகளே! அக்குறைகள் நமக்குச் சொந்தமானவை. அவை என்னவென்று அறிந்தீர்களா? அறிந்த பின் அவற்றைப் போக்க வழி தேடாமல், வாயால் மேயோவைத் தூற்றுவது தேசத்திற்கிழைக்கும் நற்கடனாகுமா?

மேயோவின் "குப்பைகளை" கூட்டித்திரட்டி அவற்றிற்கு விளக்க உரை கூறப்பட்டுள்ள அருமையான நூலை இன்றே வாசித்துப் பாருங்கள்.

திரு. அய்யாமுத்து அவர்களால் எழுதப்பட்டது. ஆக்கியோன் உருவப்படத்துடனும், திரு. ஈ. வெ. ராமசாமி முகவுரையுடனும், திரு. சனக சங்கர கண்ணப்பரின் அபிப்பிராயத்துடனும் மிளிர்வது.

விலை அணா நான்கு. தபாற் செலவு இனும். முன் பணம் அனுப்ப வேண்டும்.

கிடைக்குமிடம்:— ஸ்ரீகோவை. அ. அய்யாமுத்து,
புஞ்சை புளியம்பட்டி.
(எப்) சத்தியமங்கலம் வழி கோயமுத்தூர் ஜில்லா.

வெளியாகி விட்டது! வெளியாகி விட்டது!!

100 வருஷ பஞ்சாங்கம்

இதில் இங்கிலீஷ் 1854 முதல் 1954 வரை எல்லா வருடங்களுடன் தமிழ், இங்கிலீஷ் வருடம், மாதம், தேதி, கிழமையாகியவைகள் அடங்கியுள்ளது.

மற்றும் (இங். 1854) ஆனந்தாதி ஆனந்த அக்ஷயாந்தம் (இங். 1927) வரை பஞ்சாங்கங்களின் எல்லா அங்கங்களும் அடங்கிய முழுப்பகுதியும் சேர்ந்துள்ளதுடன் உபயோகமுள்ள பல சோதிட கணித சாரப்பொக்கிஷமும் மற்றும் பல உலகசம்பவக் குறிப்புக்களும் சேர்க்கப்பெற்று சுமார் 1200 பக்கங்களுடன் உயர்ந்த கில்ட் அழுத்திய சிறந்த பயின்டுள்ளது. இது பொது மக்கட்கும், வக்கீல்கள், கலெக்டரிகள், மிராசுதாரர்கள், சோதிடர்கள் மற்று மனைவருக்கும் உபயோகமுள்ளது. குறைந்த விலை.

விலை ரூ. 7-0-0 தபால் செலவு ரூ. 0-12-0.

வெளிநாட்டிற்கு தபாற்கூலி வேறு முன்பணம் அனுப்பவும்.

எஸ். கூடலிங்கம், புத்தகசாலை, மதுரை (S. I.)

கொக்கோக வசனம்.

அதிவீரராமபாண்டியர் பாடிய பழைய கொக்கோகத்தின் விளக்கமும் விரிவுமான வசனம். படங்களுடன் ரூபா 1.

30-வருடமாய் பிரசித்திபெற்ற எங்கள்

ஸ்வர்ண சஞ்சீவி:

இது 108 புடம் தீர்ந்த அயம், காந்தம், தங்கம் இம்மூன்றுமான செந்தூரமாகும். இதனால் பல துர்ப்பழக்கங்களால் இழந்த தாதுவைக் கட்டச்செய்து தளர்ந்து பயனற்ற நரம்புகளுக்கு முறுக்கேற்றிப் புதிய வாலிபனாகச்செய்யும் சிறந்த ரத்த விருத்தி ஔஷதம். துரிதஸ்கலிதம், மறதி இனி இல்லற இன்பம் நமக்கு உண்டோ என்று ஏக்கம் காரணமாகிய நபும்சகம் என்னும் ஆண்மை யின்மையை முற்றும் ஒழிப்பதில் கைகண்டது. 20 நாள் மருந்தில் தேகநிலை அதிகரிக்கும். மேல்தோல் தளர்ச்சியும் சுருக்கமும் நீங்கும். நகக் கண்கள் பலமடையும். கண் பார்வை அதிகரிக்கும். ஜீரண சக்தியை உண்டாக்கும். நரைக்கத் தொடங்கும் மயிரைக் கருமையாக்கி நல்ல முகதேஜஸையும் உற்சாகத்தையும் கொடுத்துப் புதிய மனிதனாகச் செய்வதில் உத்தரவாதமானதும் நம்பிக்கையுமானதும் ஜெகப்பிரசித்தமுமானது.

20-நாள் மருந்து விலை ரூபா 5-0-0.

மதனகாமேஸ்வர லேகியம்

இது விலையுயர்ந்த கற்பங்களும் அபூர்வ மூலிகைகளும் அரிய விதைகளும் சேர்ந்தான திவ்ய லேகியம். 20-நாளில் நீத்துப்போன தாதுவை அபாரமாக்கி கட்டுச் செய்து நரம்புக் கூடுகளுக்கு மிகவும் முறுக்குண்டாக்கிப் புதிய வாலிபத்தை உண்டாக்குவதில் கைகண்டது

20-நாள் லேகியம் ரூபா 2-0-0.

மதனராஜ திலா

இது சகலவித நரம்புத் தளர்ச்சியையும் முற்றும் போக்கிவிடக்கூடிய அற்புத சக்திவாய்ந்து விலை உயர்ந்த சரக்குகளால் ஆனது. இந்த மருந்து இனிச் சிற்றின்ப சுகத்தை யனுபவிப்பதற்கில்லையே என்று ஏங்கின நூற்றுக்கணக்கான மனிதர்களுக்கு நபும்ஸகத்தைப் போக்குவதால் கரையேற்றி நரம்புகளுக்கு முறுக்கையும் வலிமையையும் கொடுத்துள்ளது. துவண்டு தளர்ந்துபோன நரம்புகளை நன்றாய் முறுக்கேற்றிக் கெட்டிப்படுத்துவதில் கைகண்டதும் உத்தரவாதமுமானது.

1-அவுன்ஸ் தைலம் ரூ. 2-0-0.

வெளிநாட்டு ஆர்டர்கள் முன்பணத்துடன் வரவேண்டும்.

தனம் & கம்பெனி, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

வெளியாகி விட்டது! வெளியாகி விட்டது!

சாமிகளின் அடிமைகள்

சாமிகளின் அடிமைகள் என்னும் மொழி பெயர்ப்பு நூல் இப்பொழுது விற்பனைக்குத் தயாராய் உள்ளது. இதன் விலை 1-8-0 ரூபாய் என்று நாம் குறிப்பிட்டிருந்தோம். ஆனால் பலர் இவ்விலையைச் சிறிது குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதின் பேரில் நாம் பிரதி ஒன்றை 12 அணாவிற்கே கொடுப்பதாக உத்தேசித்துள்ளோம்.

விலை ரூபாய் 0—12—0.

திராவிடன் புத்தகாலயம்,
14, மௌண்ட் ரோட், சென்னை.

தனிப்பிரதி விரும்புவோர் 1½-அணா தபால் ஸ்டாம்பு அனுப்பவும்.

சாதிவேற்றுமை ... அடியோடு ஒழியுங்கள்

இந்த வியாசத்திலும் யாகத்தைப்பற்றி சில சொல்லுகிறேன்

(கைவல்யம்)

யாகமென்றால் ஆராதனை என்பது பொருள் என்று உங்களுக்குத் தெரியும். இவைவெளிப்படை யந்தரங்க ஆராதனைகளின் நோக்கம் தனது உலகத்தொழில்களிலிருந்து தன்னைப்பிரித்து உலக விஷயலாபம் ஒன்றுமில்லாத செயல்களில் பிரவர்த்திக்கும்படிச் செய்து தனது மனதைத் நருக்தபடி விசாலப்படுத்தி ஏகாக்ரப்படுத்துவதிற்காம். இவ்விதமாக சுத்தப்பட்ட மனதில் ஆத்மாவின் நிஜரூபம் தோன்றும் என்பது சாஸ்திரங்களின் உட்கருத்தாம். இதற்காகவே யாகங்கள் செய்யப்படுகிறதென்றும் சொல்லுகிறார்கள்.

பாலக்காட்டில் நடந்த ஆதி உருத்திரயாகத்தில் பத்தாயிரம் பிராமணர்களுக்கு தலைவராக விருந்த டி. ஆர். ராமச்சந்திர அய்யர் அவர்கள் வேத சாஸ்திரம் படித்தவரென்றும், வைதிகர்என்றும், வைதிகர் மகாநாட்டிற்கெல்லாம் தலைவர் என்றும் சொல்லுகிறார்கள். இவர் உலகத் தொழில்களிலிருந்து பிரிந்து உலக விஷயங்கள் ஒன்றுமில்லாத செயல்களில் கொஞ்சமாவது பிரவர்த்திக்க முடியாமலிருக்கையில், யாகமும் ஆராதனையும் அதன் சாஸ்திர உட்கருத்தும் யாருக்குத்தான் உபயோகப்படும். இவரோ எழுபதிற்கு மேல் வயதாகியும் வக்கீல் வேலையைவிடாமல் பணம் பூமி சம்பாதிப்பதிலேயே கருத்தாயிருக்கிறார். யாக ஆராதனை வழி உண்மையானால் அதன் கருத்தும் பலனும்இவருக்கேன்வரவில்லை? இரண்டாவது பாலக்காட்டின் யாகத் தலைவர் கல்கத்தா இங்கிலீஷ் பள்ளிக்கூட உபாத்தியாயரும், முன்னுவார் பிராமணமகாநாட்டிற்குத்தலைவராக விருந்து பிராமணன் சூத்திரன் என இரண்டு ஜாதியே நமதுநாட்டிலிருக்கின்றனவென்று சொன்னவருமான பாலக்காட்டு அனந்த கிருஷ்ண சாஸ்திரிகள் வைதீக கோஷ்டிகளுக்கு இங்கிலீஷ் சட்ட வக்கீலும், இங்கிலீஷ் பள்ளி உபாத்தியாயரும், தலைவர்கள்ஆவார்கள். இந்த இரண்டு பேர்களும் இவர்களுக்கு இக்கால நாகரீகத்தால்ஏற்பட்டதொழில்களில் மனமழுந்தி இவ்வுலக விஷயத்தில் தங்கள் புத்திரர்களின் பேரப்பிள்ளைக்கும் சுகபோகங்களை நிலை நிறுத்தி வைக்கும் பிரவர்த்திகளில் மூழ்ந்து நிற்பவர்கள். இவர்கள் கதியே இப்படி இருந்தால் இவர்களைப் பார்த்து இவர்களிருக்கும் உலகப்பதவியை நினைத்து அவ்வளிலைக்குத் தாங்களும் வர வேண்டுமே என்னும் ஆசையையுடைய பார்ப்பனர்களுக்கும் தங்கள் பிள்ளைகள் உயர்ந்த பரீட்சை கொடுப்பதற்கும் வக்கீல் வீட்டில் பெண கட்டுவதற்கும் அங்குமிங்கும் ஓடித்திரியும்வைதீகப்பார்ப்பனர்களுக்கும் சிராத்தசாப்பாடு சாப்பிட்டுத் திண்ணையில்தூங்கிப் புரளும் பார்ப்பனர்களுக்கும் நல்லதுகெட்டதுகளுக்கும் கால் ரூபாய் தட்சணைக்கே அலைந்து திரிகிறபார்ப்பனர்களுக்கும் சாப்பாடும் இரண்டணா தட்சணையும் கிடைத்தால் பத்துமைலாவது போய் சாப்பாட்டில் பரிமாறப்பட்ட சேனைக்கிழங்கு வறுவலையும், நேந்திரன் வாழைக்காய் வறுவலையும், அப்பளத்தையும் சாப்பிடாமல் எடுத்து மூட்டை கட்டிக் கொண்டுவரும் மலையாளத்துப்பார்ப்பனர்களுக்கும், சாஸ்திரங்களின் உட்கருத்து உபயோகப்படுமா? ஆராதனையின் அஸ்திவாரத் தண்டையாவது போகமுடியுமா? பிராமணனென்றும், வைதீகனென்றும், யாகமென்றும், ஆராதனை யென்றும், ஈஸ்வர கிருபையைக் கொண்டு வருகிறேனென்றும் விவேகமற்ற உலகத்தை ஏமாற்றலாமே ஒழிய ஒரு சிறிதாவது தேசத்திற்கோ சமூகத்திற்கோ தம் மனத்திற்கோ இதுவரையிலும் யாகத்தால் நன்மை உண்டானதுண்டா?

ஆத்மாவின் நித்யத்வத்தை மகான்கள்போல சதா மாறாத ஞாபகத்தில் வைத்து உயிருள்ள பொழுதே பிறவிப் பிணியின் துன்பத்தை நீக்கி ஆனந்திப்பதற்கு கடவுள் ஆராதனையேமுக்கிய சாதனம். இப்படிப்பட்ட ஆராதனையில் பெறுதற்கரிய பேரின்பசுகம் அடைவதற்கே மனிதன் பிறந்திருக்கிறான். உலக இன்பத்தைப் பார்க்கிலும் சிறந்த இன்பம் உண்டு என்றும், அந்த இன் த்தையடைய வேண்டிய விதம் இப்படிப்பட்டதென்றும், அதற்காக உலக சுகத்தை விடவேண்டுமென்றும், வேதத்தின் சம்மதம் சகலமும் தவிர்வதே தருத்தாகும்என்று சொல்லப்படுகின்றன. அந்த வேத சம்மதப் பிரகாரம் ஒழுகுவது வைதீகமென்று சொல்லுவதால் உலக சுகங்களைவிட்டு மோட்சத்திற்குப் பிரவேசிக்கவேண்டியது தானே வைதீகம். அப்படியில்லாமல் எழுபது வயதிற்கு மேலாகியும் வக்கீல் தொழிலில் ஏராளமான பொருளைச் சம்பாதித்தும் இந்து சாஸ்திரத்தால் மிலேச்ச பாஷை என்ற பாஷையைச் சொல்லிக் கொடுப்பதற்கு உபாத்தியாயராக இருந்து கொண்டும்இகலோகசுகங்களை அனுபவித்து வைதீகத்தலைவர்கள் என்னும் பெருமையோடு பேரின் பத்திற்கு ஒரு சிறிதும் மனதைச் செல்லவிடாமலிருக்கும் இவர்களுக்கே சாஸ்திரங்களின் உட்கருத்தையும் ஆராதனையின் பலனையும் அடைய முடியவில்லையென்றால், கால் ரூபாய் அதிகத்திற்காக வேஷ்டியை வரிந்து கட்டி வேண்டுமட்டும் விவகாரம் சொல்லும் வேதபாராயணம் செய்யும் பார்ப்பனர்களுக்கும், அதைப் பெரிதாக நடத்தும் வியாபாரஜாடை ஆராதனைக்காரர்களுக்கும், மலையாளத்து சமாராதனையில் பார்ப்பனர்கள் பால் பாயாசத்தை அதிகம் குடிக்காதிருக்க வயிற்றை நிறைப்பதற்கு பிண்டிப யாசத்தை இலையில் அதிக மூற்றுவதைக் கண்டு கூச்சல் போடும் சுபாவமுடைய பாலக்காட்டு வைதீகப் பார்ப்பனர்களுக்கும் சாஸ்திரத்தின் உட்கருத்தும், ஆராதனையின் அந்தரங்கமும் எப்படி வரும். ஆனதால் இந்த ஆராதனை உபயோகமற்றதும், ஒருவருக்கும் பலன் கொடுக்கக் கூடியதல்லவென்பதும் பிரத்தியட்சமாக விளங்கவில்லையோ?

வேதங்களின் உட்பிரிவாகிய ஸங்கிதையானது வைதீக கர்மங்களில் உபயோகப்படும்படியான மந்திரங்களை அடக்கியுள்ளது. இவைகளின் பொருள் விளங்கும்படி மனனம் செய்து மோட்ச விஷய ஞானத்தை ஒருவன் அடைய வேண்டுமாதலின் இவைகளுக்கு மந்திரங்களென்றுபெயர்உண்டாயிற்று.இந்த மந்திர பாகங்கள்தான் வேதங்களென்னப்படும். யாகத்திற்கு வேண்டிய ஸ்தோத்திரங்களிருக்கும் ரிக்வேதமும் யாக விஷயங்கள் எல்லாவற்றையும் சரிவர அறிந்து நன்றாக நடத்தும் சக்தியை உண்டாக்கும் யசுர் வேதமும் யாகத்தில் உத்காதா தெரிந்திருக்க வேண்டிய கானவேதமான சாமவேதமும் தெரிந்து அதன் மந்திரங்கள் அர்த்தங்கள் தெரிந்து உலக சுக ஆசையை விட்டு மோட்ச விஷயங்களில் ஆசையுடையவனுமிருந்து செய்த யாகங்கள் நமது நாட்டில் நடந்திருந்தாலும் அதில் மோட்சத்திற்குச் சிலர் போனதை நாம் நம்பினாலும் பார்ப்பனர்கள்வயிறு நிறைந்ததையும் மண்டையடிப்பட்டு நமது உலகம் அடிமையானதும் கண்ணால் பார்த்துக் கொண்டிருப்பவைகளாயிருக்கின்றன.

சமய சாஸ்திரங்களில் சிலவற்றைப் படித்து அதிலொரு சுலோகம், இதிலொரு சுலோகம் கேட்டும் சமய வெளிவேடங்களால் கடித்து யாரையும் தொடாமல்ராமாவென்றோ சங்கரா சுப்போவென்றோசொல்லிக் கொண்டிருப்பது, வைதீகமல்லவென்பதை நம்மில் அநேகர் இன்னும் தெரிந்து கொள்ளாமலிருக்கிறார்கள். வேத சம்மந்தமுடையது வைதீகம். வேத சுருதிகள் ஆத்ம ஞானத்தையே போதிக்கின்றன. ஆத்மஞானத்தைக்கைக் கொண்டவனே வைதீகன். இதில் பல்லைக்காட்டித் திரிவது இழிவாக நடந்துகொள்ளுவது வாங்கின பணத்திற்குக் கூட கோர்ட்டுக்குப்போகாத வக்கீல் வேலையும் குனிந்துகொடுப்பதும்தன் ஒழுக்கத்தைத்தானே கெடுத்து மற்றவர்கள் ஒழுக்கங்களுக்கு கடவுள் பேரால் தாருவாங்குவதும் பிச்சை கேட்பது மில்லை. ஸ்மிருதி இதிகாச புராணங்கள் சுருதியின் பிரமாணங்களால் தள்ளப்பட்டவைகள். ஸ்மிருதி இதிகாசங்கள் மற்றவர்களை சூத்திரர்களாக்குவதற்கும் தன்னி வைப்பதற்கும் பார்ப்பனரின் உயர்வை மேன்மை படுத்துவதற்கும் பிரமாணங்கள். மற்றவர்களுக்கு வேத சம்பந்தமில்லை என்று சொல்லுவதால் மற்றவர்கள் எவ்வளவு படித்திருந்தாலும் பக்தி ஒழுக்கத்தில் உயர்ந்திருந்தாலும் வைதீகர்கள் என்று பார்ப்பார்கள் ஒத்துக்கொள்ளவும் மாட்டார்கள், சொல்லுவதைக் கேட்டாலும் கலிகாலத்தின் கொடுமை என்பார்கள். சட்டத்தை விலக்கிச் சித்தைக் கொள்ளுதலும் உலகத்தைத் தள்ளி ஈசனை மெய் பொருளெனக் கொள்ளுதலும் மறுமையில் அவ்வளவு தீவிரமான சிரத்தையும், இம்மையில் அவ்வளவு தீவிரமான துவேஷமும்,உறுதியான வைராக்கிய சக்தியும் அழிவில்லாத ஆத்மாவினிடத்தில் நிலையான நம்பிக்கையும் உடையவனுக்கே வைதிகர்என்று பெயரிடப்பட்டது. ஆத்ம ஞானத்தையடைவதற்கு இகலோக சுகங்களில் ஆசையற்று எல்லா ஜீவர்களிடமும் தயையும், எல்லோருடைய க்ஷேமத்தில் ஆசையும், எல்லோருடைய கஷ்டத்தில் இரக்கமுமுடைய குணங்களே வைதீக ஒழுக்கங்களென்று சொல்லப்படும்.

இந்தக் காலத்தைவிட முன்காலத்தில் யாகங்களும் அதை நடத்தும் வைதீகர்களும் அதிகமிருந்திருக்க வேண்டும். அந்த யாகங்களே நமது ராஜ்ஜியத்திற்கு வேண்டிய காரியங்களையோ காவலையோ ஈஸ்வர கிருபையையோ கொண்டுவந்ததில்லை என்பதற்கு அநேக நியாயங்கள் முன்னும் நிற்கையில், சேவுகாவிர்த்திக்கும் சாப்பாட்டுக் கடைக்கும் இன்னும் அவர்களுக்கு சாஸ்திரங்களில் ஒதுக்கப்பட்ட தொழிலைச் செய்து கொண்டு யாகம் செய்வதெல்லாம் இவர்கள் வயிற்றுப்பிழைப்பிற்குஆதாரமானவைகளைக்கொண்டு சன சமூகங்களை பலகாலமாக ஏமாற்றி வந்த குண வழக்கமேயாகும்.

இதிகாசங்களின் மூலமாக ராஜாக்களுக்கு யாகம் செய்யும்படியாய்த் தூண்டுவதற்கு அநேக கற்பனையான கதைகளை இதிகாசத்தில் ரிஷிகளும் தெய்வங்களும் தருமமுபதேசித்த பாகமென்று எழுதிய புராணங்கள் பஞ்ச லக்ஷணங்களென்றும் வேதங்களிலுள்ள உயர்ந்த தத்துவங்கள் எல்லோருக்கும் விளங்காதென்றும், ஆனதால் முனிவர் மன்னவர் மகா புருஷாது சரித்திரவாயிலாகவும் அவர்களது சம்பவங்களில் நிகழ்ந்த முக்கிய சம்பவங்கள் வாயிலாகவும் சொல்லப்படுகின்றனவென்று சொல்லியும்,யாகத்தில் ராஜாக்களுக்கு மோகங்களையுண்டாக்கி உள்ள பணத்தையெல்லாம் யாகத்திலேயே செலவு செய்து தேசத்தை கவனிக்காமல் பாழானதையும் பூர்வீக ராஜாக்கள் யாகம் செய்து மேன்மையடைந்த பொய்க் கதைகளை மற்றிய ராஜாக்களுக்குச் சொன்னதையும் முன் வியாசத்தில் சொன்னேன்.

(தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)

இதிகாசங்கள்

இராமாயணம்—சுந்தர காண்டம்

கட்டுரை—6

(திரு: சந்திரசேகரப் பாவலர்)

(சருக்கங்கள் 23 முதல் 29 முடிய)

இராவணன் போனவுடன் அரக்கியர் சீதையைத் துன்புறுத்தத் தொடங்கினர். ஒவ்வொருவராக அவளிடம் ஓடி வந்து சத்தமிட்டு இராவணனை மணந்து கொள்ளும்படி அதட்டினார்கள். அவர்கள் இராமனை இகழ்ந்தார்கள். சீதை மறுத்துரைத்துக் கண்ணீருடன் அநுமானிருந்த மரத்தடியில் வந்தாள். அரக்கியர் அவளுடைய உறுப்புக்களைப் பிடுங்கித் தின்பதாக அச்சுறுத்தினார்கள்.

சீதை, "இனி இராமனைப் பார்ப்பதேது? நான் உயிரை விட்டுவிடலாமென்றாலும் தற்கொலைக்காக நரகத்தை அடைய வேண்டி வருமே. மேலும் இவ்வுடம்பு இராமனுக்குச் சொந்தமானது. அவருடைய ஆணையில்லாமல் இதை எப்படிக் கெடுப்பது? ஆகையால் ஒருவர்க்கு உட்பட்டிருத்தலும் ஓர் பிழைப்பா?" என்று அலறினாள். அவள் மேலும், "நான் பிழைத்திருப்பது தெரிந்தால் இராமன் இங்கே கட்டாயம் வந்து இலங்கையை அழிப்பார் என்னை பிரிந்ததால் அவர் இறந்தாரோ? அன்றி மறந்தாரோ? நான் ஒருகுற்றமும் செய்யவில்லையே அல்லது இராவணன் அவர்களைக் கொன்றானோ! நான் உயிரை விடுவதே நலம்." என்று புலம்பினாள்.

இதைக்கேட்ட அரக்கியர் சிலர் இச் செய்தியை இராவணனுக்கு அறிவிக்க ஓடினர். சிலர் மறுபடியும் அவளை மிரட்டினார்கள். அப்போது அங்கே தூங்கிக்கொண்டிருந்த திரிசடையென்ற கிழவி திடீரென்று விழித்துக்கொண்டு, "நான் கொடிய கனவு கண்டேன். அவளைத் துன்புறுத்த வேண்டாம்" என்று கூறினாள். அவர்கள் வினவ திரிசடையாகிய வீடணன் மகள் கூறுகிறாள்; "இராமனும் இலக்குவனும் பல அன்னங்களால் தாங்கப் பெற்ற தங்கப் பல்லக்கில் வந்து சீதையைக் கண்டு ஒரு யானைமேலேறி சீதையையும் அதில் ஏற்றிக்கொண்டு இங்கு வந்து பின் எட்டுக்காளைகள் பூண்ட தேரில் ஏறி புஷ்பக விமானத்திலேறிக்கொண்டு வடக்கு நோக்கிப் போனார்கள். இராவணன் செவ்வாடையுடுத்து செவ்விதணிந்து மொட்டைத் தலையோடு கழுதைத்தேரில் கழுதை மேலேறித் தெற்கேபோய் தலைகீழாக மலச்சேற்றில் விழுந்து முழுகிப்போய் தென்திசை சென்றான். கும்பகர்ணனுமியோரும் அவ்வாறே சென்றார்கள். வீடணன் ஒருவனே வெள்ளாடையுடுத்து இன்னிசை முழங்க யானை மீதிருந்தான். இராமதூதனொருகுரங்கொன்று இலங்கையை எரித்தது. இந்தக் கொடிய கனவைக்கண்டேன். ஆதலின் நீங்கள் இவளைத்துன்புறுத்துவதை விட்டுக்காலிலே விழுந்து மன்னிப்புக்கேளுங்கள். இவளுக்கு நல்ல சகுனங்கள் தோன்றுகின்றன. ஆதலின் இராமன் மிக விரைவில் இவளை மீட்பான்" என்று இவ்வாறு கூறினாள்.

சீதை இராவணன் கூறிய மொழி கேட்டு நடுங்கி, "ஐயோ! என் உயிர் போகவில்லையே. உயிரை விடுவது பாவமல்லவா? எவ்விதத்திலாவது உயிரைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும் என்ற நீதிப்படி நான் என் இராவணனை அநுசரித்துப் பிழைத்திருக்கக்கூடாது? இராவணனை என்மனம் நாடுமோ? இராவணன் இரண்டு மாதத்தில் கொல்வானே என்பதை நினைக்க என்மனம் நடுங்குகிறது. எனக்கு ஒரு துணையும் காணேனே. இராமா நீர் வணங்கும் கடவுள் நாராயணன். நானும் அவனையே வணங்குகிறேன். எனக்கேன் இத்தீமை வந்தது? இராம! உமது பெருமைக்கு இழுக்குவருமே என்றுதான இவர்களை அழிக்கவில்லை நீர் அயோதிக்குப்போய் அழகிய பெண்களுடன் கூடிக் காலங்கழிப்பீர். நான் உயிரைவிடுகிறேன். இந்த அரக்கியர் விழித்துக்கொள்ளு முன் நான் இறக்கவேண்டும்" என்று தலைப்பை மரக்கிளையில் முடிந்துதுக் கிட்டுக்கொள்ளத் துணிந்து நின்றாள். அப்போது நல்ல சகுனங்கள் தோன்றின. சீதை அவைகளைக் கண்டு முகமலர்ச்சியடைந்து மகிழ்ந்தாள் இவ்வாலாற்றைஆராய்வோம்.

அரக்கியரால் துன்புறுத்தப்பட்ட சீதை "நான் உயிரைவிட்டு விடலாமென்றாலும் தற்கொலைக்காக நரகத்தை அடையவேண்டிவருமே; மேலும் இவ்வுடம்பு இராமனுக்குச் சொந்தமானது அவருடைய ஆணையில்லாமல் இதை எப்படிக்கெடுப்பது? ஆகையால் ஒருவருக்கு உட்பட்டிருத்தலும் ஒரு பிழைப்பா" என்று கதறுகிறாள். இது எவ்வளவு உண்மையென்பதை அன்பர்களே! எண்ணிப் பாருங்கள்! ஆரியர் பெண்களை ஆண்களின் அடிமைகளென்றும், அவர்களின் உடல்கூட ஆண்களுக்கே உடைமைப் பொருளென்றும் கருதியிருந்தனர். பெண்களும் இக்கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருந்தனர். இம்மூடக் கொள்கையே தமிழ்நாட்டிலேயும் பரவி தற்காலத்திலும் தமிழ்நாட்டுப் பெண்மணிகளை இழிந்த நிலையில் வைத்திருக்கிறது. சீதை உயிரைவிடத் துணிகிறவள் இராமனுக்குச் சொந்தமான உடலை அவனது ஆணையில்லாமல் எவ்வாறு போக்குவது என்று கவன்று, "ஒருவருக்குக் கட்டுப்பட்டிருத்தலும் ஒரு பிழைப்பா?" என்று புலம்புகின்றனள். உண்மையே! இந்நிலையில் ஒருவருக்குக் கட்டுப்பட்டிருத்தல் ஒருபிழைப்பே ஆகாது! இக்கட்டுப்பாடு ஆரியப் பெண்ணாகிய சீதையையே எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்குமுன்னரே அதனால் விளையும் துன்பத்தைக் கண்டு நடுங்கி கூக்குரலிடச் செய்திருக்கிறது. அம்மம்ம! அடிமைவாழ்வு மிகவும் கொடுமையானதே!

இதனால் நாம் கட்டுப்பாடென்பது கூடாதெனக்கூற வரவில்லை கட்டுப்பாடில்லாமற் போனால் உலக வாழ்வு செம்மையாக நடைபெறாது. அதனால் கலகங்களும் சண்டை சச்சரவுகளும் ஏற்பட்டு உலக முழுதுமே கொடிப்பொழுதில் அழிந்துபோம். ஆனால் அக்கட்டுப்பாடென்பது வேறுபாடில்லாமல் எல்லாருக்கும் பொதுவானதாக அமைந்திருத்தல் வேண்டும். பெரியவனுக்கும், சிறியவனுக்கும், பணக்காரனுக்கும், ஏழைக்கும், அரசனுக்கும், குடிகளுக்கும், ஆணுக்கும், பெண்ணுக்கும் யாதொரு வேறுபாடும் காட்டாமல் அக்கட்டுப்பாடு அனைவருக்கும்பொதுவாக அமைந்திருக்குமேல் அன்றுதான் உலகத்தில் அமைதியான வாழ்க்கை ஏற்படும். உள் நாட்டானுக்கு ஒருசட்டம், அயல் நாட்டானுக்குஒரு சட்டம், கருப்பு நிறத்தானுக்கு ஒரு சட்டம், சிவப்பு நிறத்தானுக்கு ஒரு சட்டம்,வெள்ளை நிறத்தானுக்கு ஒரு சட்டம், பெண்ணுக்கு ஒரு சட்டம், ஆணுக்கு ஒரு சட்டம்; எத்தனைவேறுபாடான சட்டங்கள்? இத்தனை வேறுபாடுகளையும் கடவுளா உண்டாக்கினார்? என்ன அறியாமை? வேறுபாடென்பது இல்லாமற்போகுமா? ஆணும்பெண்ணும்ஒப்பர் எனச் சிலர் வினவலாம்.

நிற வேறுபாடு ஒழியவேண்டுமென்று எவ்வாறு போராட்டங்கள் நிகழ்கின்றனவோ, அவ்வாறே ஆண் பெண் என்ற வேறுபாடும் ஒழியவேண்டும் என்ற போராட்டம் உலகமெங்கணும் தோன்றியிருப்பதே இதற்குத் தகுந்த விடைபகரும். உடலமைப்பால் ஆண்களும் பெண்களும் ஒவ்வார் என்பது ஒருவாறு உண்மையே. ஆனால், கருக்கொண்ட காலங்களில் தவிர ஏனைய காலங்களில் அவர்கள் பழக்கமிருப்பின் ஆண் மக்களைப்போல எல்லாவிதமான செயல்களையும் திறம்படச் செய்யவல்லவரே இருந்தாலும் பெண்கள் பூப்புக்காலங்களிலும்கருக்கொண்ட காலங்களிலும் கருவுயிர்த்தகாலங்களிலும் மிகவும் தளர்ந்த உடலுடனிருப்பார்களாகையினால் அக்காலங்களில் வீட்டிலிருந்து மிகவும் அமைதியாகப் பேறவேண்டியவரே. ஆனால் இவ்வுண்மைக்கும் மாறாக ஒன்று சொல்லலாம். உலக வாழ்க்கையில் ஆண் பெண் என்பது எல்லா உயிர்வகைகளிலும் அமைந்துதானே இருக்கிறது. மாடுகள் மந்தையில் வைத்துக் கருவுயிர்ப்பதையும், மறுநாளே அவை மந்தைக்குப்போவதையும், ஆடுகள், நாய்கள், பூனைகள் முதலிய நாடுவாழ் உயிர்களும் அவ்வனமே தோட்டங்களிலும் மந்தைகளிலும் வயல்களிலும் கருவுயிர்த்தலும் கருவுயிர்த்த போதுமட்டும் தளர்ச்சியடைந்து மிக விரைவில் வலியுற்று மறுநாள் தமது வயிற்றுக்கு உணவு தேட வழக்கம்போல் வெளிச்செல்வதையும் கண்ணாரநாடோறும் காண்கின்றோம் மக்களுடன் நாட்டில்வாழ் உயிர்வகைகளே இவ்வனமாயின் காட்டில் வாழும் எண்ணிறந்த உயிர்வகைகளும், பறவைகள் முதலியனவும் எவ்வனம் வாழுகின்றன என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? மேலும் நாட்டில் வாழும் மக்கள் வகையுள்ளும் நிலைமை எவ்வாறுளது என்பதை ஆராய்வோம்.

உயர்ந்த அதிகாரத்திலும் செல்வத்திலும் ஈடுபட்டுத்துலங்கிநிற்கும் மக்கள் வீடுகளிலுள்ள பெண்கள் பெரும்பாலும் தளர்ந்த உடல் நிலையினராய் அடிக்கடி நோய்வாய்ப்பட்டு அதற்காக மருத்துவர் தலைவாயிலில் சென்று பொருளை வீசி மருத்துவரை அழைத்து வருபவராய் வாழ்கின்றனர் ஏழைமக்கள் வீடுகளிலோ பெரும்பாலும் பெண்மணிகள் வலுத்த உடல் நிலையினராய் நோய்க்கிடங்கொடா வாழ்க்கையராகவே வாழ்கின்றனர். இதற்குக் காரணமென்ன? இவர்கள் பூமியில் பிறந்தபோதே இந்நிலையினராகவா பிறந்தனரா? இல்லை இல்லை; பின்னை இவ்வேறுபாடுதான் எவ்வாறு தோன்றிற்று? அவரவர் தமது உடலை எவ்வாறு பழக்குகின்றார்களோ அவ்வாறு உடல் நிலை அமைகின்றது. வெயிலில் படாமல் நிழலிலேயே இருக்கின்ற பயிர் பச்சைகளெல்லாம் குறுகிய வளர்ச்சியுடையவைகளாய் நோய்வாய்ப்பட்டு நல்ல பலனைத்தராமலிருப்பதையும், நல்ல பகல் வெளிச்சத்தில் காற்றுடன் இருக்கும் பயிர்களெல்லாம் ஓங்கி வளர்ந்து நல்ல பலனைக்கொடுப்பதையும் காண்கின்றோம். ஆதலின் உடல் நிலை வலிமைபெற்று நோயற்றிருப்பதற்கு நல்ல காற்றோட்டமும் வெப்பமும் வெளிச்சமும் இன்றியமையாதன என்பது வெளிப்படை இதனாலேயே வீட்டினுள்ளேயே அடங்கி வெளியில் மேலேபடாமல் வேலைகளும் செய்யாமல் சும்மா

(இதின் தொடர்ச்சி 13-ல் பார்க்க)

புராண ஆபாசங்கள்

மாறுவேடம்பூண்டு புராண ஆபாசத்தை வெளியாக்கும் இரு இளைஞர்கள்

(தருமபரீக்ஷை யென்னும் பண்டைய ஓலைச்சுவடியிற் கண்டது)

(8-ம் நாள் தொடர்ச்சி)

ஒரு நாள் விஷ்ணு பிரம்மாவைப் பார்த்து, நான் உன்னைக்காட்டிலும் பெரியவன் என்று கூற பிரம்மா விஷ்ணுவைப் பார்த்து, நானே உன்னைக்காட்டிலும் பெரியவனென்று கூற, இருவருக்கும் சண்டையுண்டாகி கடைசியாக ஈஸ்வரனிடத்தில் சென்று பஞ்சாயத்துக்கேட்க ஈஸ்வரன் இருவரையும் பார்த்து விஷ்ணு என் பாதத்தைப்பார்த்து வரவேண்டியது. பிரம்மா என்சிரசைப்பார்த்து வரவேண்டியது. இவ்வாறு பார்த்துவிட்டு யார் முன்வருகின்றார்களோ அவரே பெரியவரென்று பிரம்மாவையும் விஷ்ணுவையும் ஓட்டப்பந்தயம் விட, விஷ்ணு பாதத்தை தேடிக்கொண்டு போக, பிரம்மா சிரசை தேடிக்கொண்டு சென்றனன். இவ்வாறு இவர்கள் போகப்போக அவர்களிருவர்களும் சிரசும் பாதமும் அகப்படாமல் அயர்ந்தார்கள். பிரம்மாவானவன் வெறுப்புற்று வருத்தத்தோடு போகும்போது ஈஸ்வரன் சிரசிலிருந்து தாழம்பூவிழ, அதை பிரம்மா பார்த்து நீ எங்கேயிருந்துவருகின்றுயென்று கேட்க, அதுவும் ஈஸ்வரன் தலையிலிருந்து வருகிறேனென்றது. ஆனால் ஈஸ்வரன் சிரசு இன்னும் எவ்வளவு தூரமிருக்கிறது யென்றான் பிரமன். அதற்கு அந்தப் பூவு! அது இன்னும் வெகு தூரம் இருக்கிறது. அதைப் போய்க்காண உன்னால் முடியாது என்றது. பிரம்மாவானவன் இடுக்கிட்டு, ஓ! தாழம்பூவே! நான் ஈஸ்வரனிடத்தில் சென்று சிரசைப்பார்த்துவிட்டதாக சொல்லுவேன். அதற்கு நீ சாட்சியாக ஆமாம் என்று கூறவேண்டும் என்றனன். அப்பூவும் அவ்வாறே சொல்ல ஒத்துக்கொள்ள அதை எடுத்துக்கொண்டு திரும்பி ஈஸ்வரனிடம் வந்து தான் சிரசைப்பார்த்ததாகவும் அதற்குத் தாழம்பூவே சாட்சியென்றுங் கூற ஈஸ்வரனும் தாழம்பூவை விசாரித்தான். அந்தப் பூவும் பிரம்மா சிரசைக் கண்டார் நான் பார்த்தேன், நாங்களிருவரும் அங்கிருந்துதான் வருகிறோமென்று சாட்சியங்கூறிற்று. இதைக்கேட்டு ஈஸ்வரன் விஷ்ணுவின் வரவை எதிர் பார்த்திருந்தான். அப்பொழுது விஷ்ணுவானவர் ஈஸ்வரன் முழங்கால் வரை போய் அயர்ந்துபோக அப்பொழுது நாரதன் வந்து விஷ்ணுவின் விருத்தாந்தத்தை விசாரித்தான். விஷ்ணுதான் ஈஸ்வரன் பாதத்தை தேடிச்செல்வதைக் [illegible] தூரம் இருக்கின்றன, ஆகையால் நீ திரும்பிவிடு என்றுகூற விஷ்ணுவும் திரும்பிவிட்டான். உடனே விஷ்ணு வருத்தத்தோடு ஈஸ்வரனிடஞ் சென்று முழங்கால் வரை சென்றும் பாதத்தைக்காண முடியவில்லையென்று வணக்கமாய்க் கூறி நிற்க; ஈஸ்வரன் சந்தோஷித்து நீயே பிரம்மாவைக்காட்டிலும் உயர்ந்தவன், பிரம்மா சோம்பேறியும் பொய்யனுமானான் என்று கூறிவிட்டுத் தாழம்பூவைப் பார்த்து ஹே! தாழம்பூவே என் சிரசிலிருந்து கொண்டே என் எதிரிலேயே பிரம்மாவுக்கு பொய் சாட்சி கூறினையல்லவா? ஆகையால் நீ என் பூஜைக்கு உதவாதுயென்று வெறுத்துத் தள்ளினார். அது முதல் தான் தாழம்பூ ஈஸ்வரனுக்கு உதவாது போயிற்று.

ஐயா! விப்ரர்களே! இவ்வாறெல்லாம் உங்கள் மும்மூர்த்திகளின் யோக்கியதையையும் ஞானமின்மையையும் உங்கள் புராணங்கள் வெள்ளையாக வெளுக்கின்றதா அல்லவா? என்றான். பிராமணர்களில் சிலர் வாய் திறவாது மௌனமுற்றனர். சிலர், உண்மையாக இக்கோரக்கதைகள் ஏராளமாய் எங்கள் புராணத்தில் எட்டுக்கேடாய் எழுதப்பட்டிருக்கின்றன வென்றார்கள். உடனே மணிவேலன் எழுந்து ஹே! விப்ரர்களே! கடையிலா ஞானம், கடையிலா காட்சி, கடையிலா வீரியம், கடையிலாவின்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுள் இன்மை, அந்தராயங்களின்மை, முதலாகிய எண் குணங்களமைந்து விருப்பு வெறுப்பற்று உள்ள ஒரு பரம்பொருளையே உலகுக்கு இறைவனென்று கூறவேண்டும். இத்தகைய குணத்தையுடையவர்க்கே சர்வக்ஞன் என்று பெயர். இத்தகைய குணமுடைய ஒரு பொருளையே ஜினனென்றும் ஈஸ்வரனென்றும், பிரம்மாவென்றும், விஷ்ணுவென்றும், புத்தரென்றுங் கூறலாம். இக்குணங்களில்லாமல் முன்னே கூறிய ஆபாசக் கதைகளைக் கட்டி கடவுள் நம்மைக் காக்கின்றார், அழிக்கின்றார், படைக்கின்றார். அவரை வணங்காவிட்டால் உங்கள் பேரில் கோபங்கொள்வார். மாறுவேடம் பூண்டு வந்து கொல்லுவார். அவருக்குப்பெண்டாட்டிபிள்ளைகள் கூடயிருக்கின்றனர். அவர் அடிக்கடி பிறக்கின்றார் என்று பயமுறுத்தி கடவுள் பேரால் பலர் பிழைப்புக்கு வழிதேடிக்கொண்டு மனிதர்களை மிருகங்களாக்கும் புராணங்களை [illegible] புராண ஆபாசங்களை வெளியிட்டவர்கள் நாம் சகளே! இன்னுமிருந்திருக்கும் ஆபாசங்களைக் கணக்கிடவு முடியாது. ஆகையால் பிராமணர்களும் இனி இம்மாதிரி மனிதர்களை கடவுள் பேரால்மிரட்டிப்பிழைக்கும் கொடிய வழக்கத்தை விடவேண்டும். பொது ஜனங்களும் விப்ரர்கள் கூறிவரும் புராணங்களெல்லாம் கட்டுக்கதைகளென்று தெளிந்து நன்மார்க்கத்தில் ஒழுகவேண்டும். நாங்களும் இக்கதைகளைப் பலவிடங்களிலும் பிரசுரித்து ஜனங்களை கடவுள் பயத்தினின்றும் நீக்கி நல்லொழுக்கத்தில் ஈடுபட்டு ஆத்மசாந்தி அடையும் புனித வழியை போதித்து வருகின்றோம். பாடலீபுரத்திலுள்ள யாவரும் நற்காட்சி, நன்ஞான, நல்லொழுக்கமாகிய மும்மணிகளைக் கடைபிடித்து நடப்பீர்களாக வென்று கூறிமுடித்தான். உடனே அங்குள்ள பொது ஜனங்களும் பிராமணர்களில் பலரும் ஒன்று கூடி அவ்விரு இளைஞர்களுக்கும் பூமாலை போட்டு சிம்மாதனத்தில் உட்காரவைத்து ஜெயபேரிகை கொட்டி ஜெயபட்டமளித்து சந்தோஷங்கொண்டாடினார்கள்.

குறிப்பு:—தருமபரீக்ஷை என்னும் இச்சிறியநூல்; மிகவும் பழைமையானது. இந்தி, கன்னடம், ஹிந்தி, குஜராத்தி, வங்காள முதலிய பாஷைகளில் வெகு நாளைக்கு முன்பே அச்சுருபமாய் வெளியாயிருக்கின்றனவென்பது இப்பொழுது தான் தெரியவந்தது. இதுவரை குடியரசில் எழுதிவந்தவைகள் என்னிடத்தில் கிடைத்த ஓர் பழைய ஏட்டுச்சுவடியிலிருந்து எடுக்கப்பட்டு எழுதிவந்தவைகள், ஆகையால் சில இடங்களில் குற்றங்குறைகள் நிறைபவிருக்கும் இதற்குப் பின்பேகன்னட அச்சுப்பிரதி என்னிடங்கிடைத்ததாகையால் அதன் ஆதாரவையும், ஏட்டுப்பிரதியின் ஆதாரவையுங்கொண்டு திருத்தமாகவும் நல்ல நடையாகவும் தவறிவிட்ட சில கதைகளைச் சேர்த்துமெழுதிவருகின்றேன். நம் தமிழ் நாட்டில் இத்தகைய ஒரு அரிய புத்தகம் அவசியம் வேண்டியிருப்பதால் அச்சிட பொருளுதவிபுரியும் புண்ணியவான்களுக்கு நான் எழுதி வருவதை இனமாக அளிக்கின்றேன்.

இங்ஙனம்,
தங்களன்பன்
ஜீவகாருண்ய பிரசாரகர்
[illegible]
6, சுப்பிரமணிய [illegible],
ஜீ. டி. மதராஸ்.

தன் மதிப்பு

(ஸ்ரீ ஆதிநாதன்)

(1-12-29-ம் தொடர்ச்சி)

இப்பாழும் மதங்களையும் பார்ப்பனர்களையும் பழைமையும் உயர்வும் உடையவர்கள் என்று மதிப்பதனாலேயே இக்கேடடைந்தது. அப்பர், சடகோபர், இராமாநுஜர் யாவரும் குல வேறுபட்டை ஒழிக்க முன்வந்தனர். அவர்கள் ஜயம் பலிக்கவில்லை. அவர்களை எல்லாம் பாழும் பார்ப்பனரும் மடாதிபதிகளும் வாரி மூலையில் போட்டுவிட்டனர்.

எகளுவது நியாயத்தை எடுத்துப் பேசப் போனால் அவன் அழிக்கவந்த வனுகி விடுகின்றான்.

வடநாட்டில் சனாதன் சிறிது சீர்பெற்றெழுகிறது. அதுவும் அமையாது.

புத்தியைக் கெடுக்கிற பொய்ப் புராணங்கள் வெறும் கதைகளாக வேண்டும்.

சுயமரியாதையாகிய வீட்டுக்கு அஞ்சாமையும், இளமையும், அறிவுடைமையும், வலியுடைமையும், செங்கல், சுண்ணாம்பு, நீர், மணல்களாகவும், நெறிமுறை அடிப்படையாகவும் அமையவேண்டும்.

பலவிதமான கஷ்டம், ஆபத்து, கெடுதி சம்பவிக்கக்கூடும். எதுவந்தாலும் சரி என்று அலக்ஷியப்பொறுமையாக அனுபவித்துச் சிறிதும் ஊக்கத்தில் தளராமல் எடுத்த காரியத்தை இனிது நடத்தவேண்டும்.

மிகுந்த கல்வியையும், அதிக உடல் வலியையும் சுயமரியாதையுள்ள வாலிபர்களும் மகளிரும் தேடிக்கொள்வது முதற்கடமையாகும், பிறகுதான் செல்வம்

செல்வமும்செந்நெறியுஞ்சுயமரியாதையாகிய பயிரைவளர்க்குமெருவும் நீருமாகும். சுயமரியாதையுள்ளவனே சுயராச்சியத்திற்கு உரியவனாகிறான். சுயமரியாதையுள்ள ஒருவனே பெரிய சீர்திருத்தக்காரனாகிறான். அவனுக்குப் பலவகைக் கேடுகள் வந்தடையக் காத்து நிற்கின்றன. முதலில் அவன் உறவினரே பழிக்கின்றனர்; குடும்பத்தினரே எதிர்க்கின்றனர்.

பாழும் அறியாமையும், வைதிகமும், வறுமையும் சுயமரியாதைப் பயிரை அழிக்கும் பூச்சி புழுக்களாகின்றன. இந்த லட்சணத்தில் ஒருவன் தன் போக்கைத் தானறிந்த செந்நெறியில் மாற்றிச் செல்வது யாங்கனம்கூடும்? பிறரைத் தம் வழிப் படுத்துவது எவ்வாறியலும்? உயர்ந்த தொழில் முறைகளைக்கற்றுக்கொண்டு கையாடுதல் எப்படி முடியும்?

பெருக்குப் பெருந் தலைவர்கள் எனப் பெயர் எடுத்துள்ள பெரியார்கள் கூட உள்ளுக்குத் தம் குலத்தினரும் குழுவினரும் செய்யுங் கொடுமையான வழக்க முறைகளுக்கு உட்பட்டுக் கைகொடுத்துத்தவிக்கின்றனர்.

தலைவர்களுள் சரியானவர்களை அறிந்து கொள்ளுதல் அரிது. சிறந்த தலைவர்களின் கொள்கைகளை உள்ளவாறுணர்தல் அதனினுமரிது. பாமரமக்களை ஏய்ப்படுத்தலும், ஏமாற்றலும் யாருக்கும் எளிது. பொதுப்படத் தலைவர்களை தூற்றிக்கோரென்றும், ஏமாற்றுபவர்களென்றும் சொல்லுதற்கில்லை. ஆனல், அவர்கள் ஆழ்ந்தவாராய்ச்சியில்லாமையே இது ஒத்துக்கொள்ளத்தக்கதாக இல்லை [illegible]

நாட்சனியுங்கூடபொது விஷயங்

ளுக்கும் சிறிதும் ஏற்றதாகாது. அடிமைப்பட்டு வாழும் நமக்கு இராச்சிய விஷயங்களிலும் தேசிய விஷயங்களிலும் உரிமை வேண்டியது தான். அந்த அரசியல் காரியங்களிலும் நம்மைப் பின்னடையச் செய்யும் ஒரு பகுதியினரை வென்று நாம் முதலில் மேற்கொண்டு பின் முற்றிய உரிமை பெற முயலக்கூடாது? அதனாலே நம்மவரும், யாவரும் கூடி கற்கக் கூடிய சிறுவரை நன்கு கற்கச் செய்து அவர்களுக்கும் பல்வகை உதவியும் புரிந்து உத்தியோகங்கள் எல்லாவற்றையும் கைக்கொள்ளச் செய்ய வேண்டியது தான். பின்பு எல்லாத்தொழில் முறைகளையும் நாமே கைக்கொள்ள வேண்டிய முயற்சிகளைச் செய்தல் வேண்டும்.

நம்முடன் கூடி இருக்கவும், உண்ணவும், தொட்டுப் பழகவும், அன்பாக உறையவும், விரும்பாத ஒரு குழுவினரைக் கலியாணம் கருமாதி, திங்கள் திவசம், கோயில் குளங்களில் சேர்த்து மரியாதை செய்வது இழிவு.

இதைச் சுயமரியாதையுள்ள எவனும் ஒத்துக்கொள்ளவும், பார்த்திருக்கவும் முடியாது. தான் பார்ப்பன முறையை ஒழித்துவிடுவதுடன் தன்னைச் சேர்ந்தவர்களையும் தொலைத்துவிடச் செய்தல் வேண்டும்.

அவை மூடப் பழக்க வழக்கங்களாகும். பாபம்! அவமதிக்கும் ஒரு சாராரிடம் காசும் கொடுத்துக் காலிலும் வீழ்வதென்றால் அதைவிட வேறு என்ன இழிவு இருக்கிறது?

வழக்கம் என்ற மூடக் கொள்கையினாலே பார்ப்பனருக்கும், அச்சம் என்ற அறியாமையினாலே ஆங்கிலேயருக்கும் அடிமைப்பட்டு சுயமரியாதை இழந்து வாழ்கிறோம்.

காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்றவாறு ஒருவன் தன்னைச் சீர்திருத்திக்கொள்ள வேண்டும்.

கல்வி செல்வம் இரண்டும் இன்றியமையாதவைதான். அணியும் மனோதைரியமும் உள்ளவனுக்கு முடியாதது ஒன்றில்லை.

சுயமரியாதை புள்ளவன் தானே உழைத்துத் தேடி அதற்குள்ளாகவே செட்டாய்ச் செலவு செய்து வாழ வேண்டும். ஆடம்பரச் செலவெல்லாவற்றையும் ஒழிக்க வேண்டும். கடன்படவே கூடாது.

தன்னைத் தான் காக்க வல்லவனே பிறகு தனது வருவாயில் பிறருக்குதவ முயலலாம். ஆனால் அது ஏற்றதாக இருக்கவேண்டும். அதுவரை சொல்லாலும் செயலாலும் செய்யவேண்டிய உதவிகளைப் புரியலாம்.

'இல்லானை இல்லாளும் வேண்டாள் ஈன்றெடுத்த தாயும வேண்டாள், செல்லாது அவன் வாயிற் சொல்' ஆதலால் நல்ல தொழிலிலிருந்துமிகவும் தேடிக்கொண்டு அதை ஏற்ற வழியில் செலவு செய்தல் வேண்டும்.

ஒவ்வொருவனும் தன் அளவில் சுதந்தரமுள்ளவனாகவே இருத்தல் வேண்டும். பெரியோர்புத்திமதிகளை நல்லதென்றறிந்தால் நாம் கொள்ள வேண்டுமே யொழிய கட்டுப்பாடாகக் கொள்ளுதல் கூடாது.

தன் மதிப்புள்ள ஒருமனிதன் பிறருக்கு பேருபகாரியாக இருக்கவேண்டும். கூடுமானால் உடல்பொருள் உயிரையும் அளிக்கவேண்டும், நல்லநடையும் அறவழியில் பெருளீட்டிச் செம்மையாய் வாழ்வையும் நடாத்துதல் முதற்கடமை என்று சொல்லாமலே விளங்கும்.

ஆறிலும் சாவு நூறிலும் சாவு என்று உடல் வலியைப் பெருக்கி அதைக்கூடியவரை தமக்கும் பிறருக்கும் பயன்படச் செய்தல் வேண்டும். எதற்கும் அஞ்சக்கூடாது. நல்லதெனத் தெரிந்ததைத் துணிந்து கையாடல் வேண்டும். எல்லாரிடமும் அன்பும் பெரியோரிடம் பணிவும் உடைத்தா யிருக்கவேண்டும்.

மிகுந்த பொறுமைவேண்டும். கஷ்டம் துன்பம் பிறர்பழிப்பையும் பொருள்படுத்தாது தமது உயர்ந்த கொள்கையிலேயே கண்ணுங்கருத்துமாக இருக்கவேண்டும். எதற்கும் ஓரளவு உளதுதான். கூடியவரை நாம் ஒதுங்கியும் அஞ்சாதும் பொறுத்தும் மனமகிழ்ச்சியோடு எல்லாரிடமும் பிரியமாகவும் நடந்துகொள்ளவேண்டும்.

இயல்பாக ஏற்படும் இன்ப துன்பங்கள் யவருக்கும் உண்டாதலால் அதனைக் கண்டு கலக்கம் கொள்ளக்கூடாது. மனச்சான்றுக்கு மாறு இல்லாமல் நடக்கிறவர்களுக்கும் பிற கொள்கைகளை வழக்கத்தை நீக்கிச் செம்மை செய்பவர்களுக்கும் என்றும் பல இடைஞ்சல்தான் ஏற்படக் கண்டு இருக்கிறோம்.

பிற்காலத்தில் பயன்தந்து அப்பொழுது அதிகத் துன்பஞ் செய்யும் காரியங்கள்பல. தன்னைநல்வழிப் படுத்துகிறவனே பிறருக்குப் பெரும் உபகாரியாகின்றான்.

தனது கல்வி, செல்வம், நடைகளால் ஒருவன் தனக்குப் பெருமை தேடிக்கொள்ளலாம். செல்வம் நிலையற்றதாதலால் அதைவிடக்கல்வியும், கல்வி சொல்லளவோயாதலால் அதை விடச் செயலும் மேம்பட்டதாகும்.

நினைவு, சொல், செயலுடன் கூடிய மாறுபடா வாழ்வே சிறந்தது. பெருமையே நாடுபவர்கள், மானம் பட்டவின் வாழாதுயிரையுங்கொடுப்பவர்கள் வாலிபர்களேயாவர்.

முன்னேற்றம்

இஃது

சுயமரியாதைக் கொள்கையை ஆயுதமாகக் கொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப் பத்திரிகை.

இதன் ஆசிரியர்-வே. சி. நாராயணசாமி

இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.

விலாசம்:—மானேஜர், "முன்னேற்றம்"

(நப்) 156, சிலிகிரோட், சிங்கப்பூர்.

விவாக ரத்து

("தமிழ் மகன்") எழுதுவது

சில தினங்கட்குமுன் சென்னையில் நிகழ்ந்த மாதர் சீர்திருத்த மகாநாட்டில், மணவிஷயத்திலும், விவாக ரத்து விஷயத்திலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை யிருத்தல் வேண்டும் என்று ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பது சில நாட்களாகப் பத்திரிகை உலகில் ஓர் கிளர்ச்சியை உண்டுபண்ணியிருப்பது நேயர்களறிந்ததாகும். சீர்திருத்தத்தை எதுவானாலும், ஆராய்ந்தறியாது வெறுக்கும் வைதீகர் ஒரு புறமிருக்க, சீர்திருத்தக்காரர்களில் ஒரு சாராரும் கூட இத்தீர்மானம் இன்றைய நிலையில் சமூகத்துக்கும், பெண்ணுலகுக்கும் தீமை பயக்கும் எனக் கூக்குரலிட்டு வருகின்றனர். அம்மகாநாட்டிற் கலந்துகொண்ட பெண்களிற் சிலருக்கு அத்தகைய தீர்மானம் பிடிக்காததால் அது நிறைவேறியது கூட்ட ஒழுங்குக்குவிரோதமான முறையிலாகும் என்று ரூபிக்கக்கூட அவர்கள் முன்வந்திருக்கின்றார்கள். அவர்கள் நிறைவேற்றிய தீர்மானம் விவாக ரத்து விஷயத்தில் ஆணைப்போல பெண்ணுக்கும் சமஉரிமை கிடைக்குமாறு சட்டமியற்றல் வேண்டும் என்பதேயாகும். இத்தீர்மானம் சீர்திருத்தத்தை விரும்பும் பெண்மணிகளாலேயே நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இனி இத்தீர்மானம் மகாநாட்டில் ஒழுங்காக நிறைவேறியதா அல்லவா என்பதை விட்டு, தீர்மானத்தின் நோக்கம் சரியானதா அன்றா என்பதை மட்டும் இங்கு ஆராய்ச்சி செய்வோம். நாட்டுக்கு இன்றைய நிலையில் விவாக ரத்து உரிமை இருபாலார்க்கும் அவசியமா என்பது கவனிக்கத்தக்கது.

பழைய மூடப்பழக்க வழக்கங்களிலும், சாத்திரக் குப்பைகளிலும் மூழ்கிக் கிடக்கும் சமூகம், மணம் என்பதை ஒரு மத விஷயமாகக் கொண்டிருக்கின்றது. அது தெய்வீக விஷயமென்றும், எனவே ஒரு புருஷனும், ஒரு பெண்ணும் கணவனும் மனைவியுமாக இணைக்கப்பட்டபின் அவர்கள் எக்காரணத்தை முன்னிட்டும் உயிருள்ளளவும்—அல்ல, மறு உலகிலுங்கூட பிரியாதிருக்க வேண்டும் என்பது சாதாரண மக்களுடைய எண்ணம். கொள்கையளவில் இது ஏற்றுக்கொள்ளத்தக்கதே. இல்வாழ்க்கையில் புகுந்திருக்கும் இருவர் என்றும் இணைபிரியாது வாழ்க்கையை இனிது நடத்துதல் நலமேயாகும். ஆனால் இன்று இக்கொள்கை நடைமுறையில் எவ்வாறிருக்கின்றது என்பதை அடுத்தபடியாகக் கவனிக்க வேண்டும். இக்கொள்கை நடைமுறையில் பிறழாது இருக்கும் வண்ணம் 'தெய்வீக' மணம் நடைபெறுகின்றதா? கணவன் தன் மனைவியுடன் மனமொத்து வாழ்கின்றானா? தன்னை ஓர் வாழ்க்கைத் துணையாகக் கொண்ட (கொள்ளும்படி வற்புறுத்தப்பட்ட) பெண்ணை ஓர்வாழ்க்கைத் துணையாக எண்ணிநடத்துகின்றானா? அல்லது அவளை ஓர் அடிமையாகத் தன்னிடம் இன்பம் கோரி நிற்கும், தன்னிடம் உணவு கோரிநிற்கும் உலகத்தில் உயிர் வாழச் சகல பொருள்களுக்கும் தன்னையே எதிர்பார்த்து நிற்கும் அடிமையாகக் கருதுகின்றானா? தான் கூறும் வேலையைச் செய்யும் பணிப்பெண்ணாகவும், தான் நினைத்த மாத்திரத்தில் இன்பங்கொடுக்கும் ஓர் கருவியாகவும் தான் கொடுத்ததைச் சாப்பிடும் அடிமையாகவும் கருதி நடத்துகின்றானா? இக்கேள்விக்கு எத்தகைய விடை விளங்குகின்றதோ அதிலேயே இந்நாள் நமது நிலையும் அடங்கி யிருக்கின்றது.

இவ்வாறு பெண்ணை அடிமையென்றும், இன்பமளிக்கும் இயந்திரமென்றும் கருதுவதற்குச் சமூகக் கட்டுப்பாடுகளும், பழக்கவழக்கங்களும், சாஸ்திரீய முறைகளும், சடங்குகளும் துணையாக இருக்கின்றனவல்லவா?

தாலிகட்டுவது ஆணுக்குப் பெண் அடிமை யென்பதைக் காட்டவில்லையா? பெண் புருஷனைத் தொட்டுக் கும்பிட வேண்டுமென்பதும் கணவன் மனைவிக்குக் கடவுள் என்பதை ரூபிக்கவில்லையா? கணவன் முன்னிலையில் மனைவியிருத்தலாகாது; எதிர்த்துப்பேசலாகாது, தலை குனிந்திருக்கவேண்டும், கணவனுடைய எச்சிலைச்சாப்பிடவேண்டும், என்பனவெல்லாம் ஆணுக்குப் பெண் கீழ் என்பதைக்காட்டவில்லையா? இவ்வளவு தாழ்வாகக்கருதப்படும் பெண் ஆணின் எதேச்சாதிகாரத்தினின்றும், விடுதலை பெற்று, உரிமையுடன், சமத்துவத்துடன் வாழவிவாகரத்து ஓர் பெருந்துணையாகும்.

கணவன் நினைத்தால், தனக்கு ஒருவாறு பிடித்தமில்லையானால் மற்றொரு பெண்ணை நேசித்து மறைவாக வாழலாம்; இல்லாவிட்டால் சாஸ்திரீய முறைப்படி மற்றொரு பெண்ணை மணந்து கொள்ளலாம்—இவ்வாறு எத்தனைபெண்களைவேண்டுமானாலும் மணந்துவாழலாம். ஆனால் எக்காரணத்தை முன்னிட்டும் பெண் கணவனைத்தவிர மற்றொருவனிடம் பேசக்கூடக்கூடாது. ஒருவன் தனது மனைவி குழந்தைபெற வில்லையானால் மற்றொரு பெண்ணை மணந்துகொள்ளலாம்—ஒருத்தி தனது கணவன் மலடாயிருப்பதால் குழந்தை பெறவில்லையானால் மற்றொருவனை மணக்கக் கூடாது. ஒரு பெண், தனது கணவன் தன்னை எவ்வாறு துன்புறுத்தினாலும் அதைப்பட்டுக்கொண்டு உயிர் விடவேண்டும்; ஒரு ஆண் எவ்வளவு அக்கிரமம் வேண்டுமானாலும் செய்யலாம். கேட்பார் கேள்வி கிடையாது.

ஒரு கணவன் நினைத்தால் ஒரு பெண்ணுக்கு ஜீவனாம்சம் கொடுத்து ஒதுக்கி வைத்துவிடலாம். ஆனால்

(8-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்பு

"குடி அரசு" ஆபீசு ஈரோட்டிற்குமாற்றப்பட்டு விட்டதால் இனி ஒன்று அல்லது இரண்டு வாரத்திற்குள் ஈரோடிலிருந்தே பத்திரிகை வெளிவரும். கடிதப் போக்குவரத்துகளை ஈரோடு விலாசத்திற்கே வைத்துக்கொள்ள வேண்டும்.

இனி இரண்டுவாரம் சென்னையிலிருந்து பத்திரிகை வரும். பிறகு ஈரோடிலிருந்து வரும்.

பத்திராதிபர்.

(6-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அவன் மற்றொருவனை மணக்க முடியாது. இவையெல்லாம் சமூகச் சட்டங்கள், 'தெய்வீகச் சட்டங்கள்'. இவற்றைப்பற்றி ஏதேனுங் கூறுவது நாஸ்திகத்துக்கு அறிகுறியாகும். ஆகவே, அவர்களுடைய கொடுமையினின்றும் தங்களை விடுவித்துக் கொள்ளவும், பாழும் சமூகக்கொடுமைகளை ஒழிக்கவுமே பெண்களுக்கும் விவாகரத்து உரிமை வேண்டுமெனப் பெண்கள் கேட்கிறார்கள். இவ்வுரிமை ஏற்படும்படி சட்டமியற்றுவதால் பெண்களுக்கோ நாட்டுக்கோ எள்ளளவும் தீமை நேராதென வலியுறுத்திக்கூறலாம்.

முதலாவது இவ்வுரிமையை யுடைய முஸ்லிம்கள், கிறிஸ்தவர், இன்னும் இந்து சமூகத்திலுள்ள சில வகுப்பார் இதனால் எத்தகைய தீமைக்கும் உட்படவில்லை. பெண்கள் கெட்டுப் போகவுமில்லை.

இனி, என்று ஏகபத்தினி விரதம் ஒழிந்ததோ அன்று ஏகபதி விரதமும் ஒழிந்ததென்றே சொல்லவேண்டும். ஒன்றில்லாதபோது மற்றது சமூகத்துக்குத் தீமையையே பயக்கும். பெண்களுக்கு இத்தகைய உரிமையை வழங்குவதால், பெண்கள் கெட்டுப்போவார்கள் என்று கூறுவது ஆராய்ச்சி யற்றவரது வெற்றுரையேயாகும். ஆணும் பெண்ணும், தாமாகவே கலந்து, மண ஒப்பந்தஞ் செய்து இல்வாழ்க்கையிற்புகவேண்டுமென்ற மனிதத்தன்மை ஏற்படும். விவாகம் தெய்வீகமானதல்ல; மனித சமூகத்தை ஒழுங்குப்படுத்தக் கோலப்பட்ட ஒரு முறையேயாகுமென்பதை ஆணும் பெண்ணும் ஒருங்கே உணர்ந்து இவ்வொப்பந்தத்தைச் சரிவர நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுக் கொள்வார்கள்.

தாய்தந்தையர், குருக்கள், புரோகிதர், ஆசாரப் பழக்கவழக்கங்கள் கையில் இருக்கும் இப்பொறுப்பு நேரே கணவன், மனைவி ஆகிய இருவரிடையும் வரும். எனவே, பொறுப்பை ஏற்றுக்கொண்டவர் அதை மீறி நடப்பதால் ஏற்படக்கூடிய தீமைகளையும் அனுபவ வாயிலாக உணர்ந்து கொள்ள முடியும். அற்பக் காரணத்தை முன்னிட்டு அவ்வொப்பந்தத்தை ரத்து செய்வதால் ஏற்படும் தீமைகளையும், அதனால் தம் எதிர்கால வாழ்வுக்கு ஏற்படக்கூடிய கெடுதலையுநன்கு உணர்வர். 'ஆகவே விவாகரத்துக்கள் அற்பக்காரணத்தை முற்கொண்டு அடிக்கடி நிகழும்; அதனால் சமூகம் பாழாய்விடும்' என்ற பயங்கொள்ளத் தேவையில்லை; மணம் மணமாக நடக்கும்;

இன்று, இச்சட்ட மில்லாததால் பெண்கள் படும் துயர் கொஞ்ச நஞ்சமல்ல. எவ்வளவு கொடுமைப்படுத்தப்பட்டாலும் மனைவி பட்டுக்கொண்டே அழுதழுது தொலைக்கின்றாள். அவளுக்கு விமோசனமில்லை. தனக்குப் பிடிக்காத கணவனை ஆயுள்மட்டும் கட்டியழ வேண்டியிருக்கிறது. அவன் அவளை விரும்பாவிடினும், தன் இஷ்டப்படி வேறு பெண்ணுடன் கலந்து, மனைவியென்ற அடிமைமீது தனக்கு முழு அதிகாரமுமிருப்பதாகத் துன்புறுத்துகின்றான். இத்தகைய பொறுக்க முடியாத, ரத்து செய்யாது தீராத சந்தர்ப்பங்களுக்கு விவாகரத்துச் சட்டம் பிரயோசனப்படுத்தலே அதுவேண்டும் எனக் கேட்கிறார்கள். இதை யுணராது, பெண்களெல்லாம் தம் இஷ்டப்படி போய்விடுவார்கள். சமூகமே ஓர் நிலையில் நிற்காது என்று கூறுவது உண்மை நிலையை உணராது கூறுவதாகும்.

இச்சந்தர்ப்பத்தில், ஓர் பெண்ணின் வாழ்க்கைத் துன்பத்தைப் பற்றி அவளது சகோதரர் மகாத்மா காந்திக்கு எழுதியதும், அவர் அதற்குப் பதிலிறுத்ததும் ஞாபகப்படுத்த தக்கவைகளாகும். புருஷன் மனைவியை அவளுக்கு எத்தகைய சௌகரியமும் கொடுக்காது துன்புறுத்துகின்றான்; மிருகத்தினுங் கேவலமாக நடத்துகின்றான். தூணில் கட்டி அடிக்கின்றான். அவள் எதிரே பார்த்து நிற்கும்படி செய்து தான் இஷ்டப்பட்ட பெண்ணுடன் கலக்கின்றான். இவ்வளவு துன்பங்களையும் பட்டுக்கொண்டிருக்கும்படி வற்புறுத்தும் சமூகத்தின் கொடுமையை நீக்க வழியில்லையா? இது மதக்கொள்கையால் இழைக்கப்படும் தீமையல்லவா? இதற்கு விமோசனமில்லையா? என்று அச்சகோதரர் கேட்க, மகாத்மா அதற்கு "இது மதத்தால் ஏற்பட்டதல்ல; ஆனால் மனித குணத்தாலேயே ஏற்பட்டது. மனைவியைத் துன்புறுத்தும் கொடியன் மதத்தால் தூண்டப்படவில்லை" யென்று மகாத்மா பதிலிறுத்தார். புருஷனுடைய கொடுமையே யானாலும், இதைச் சகிக்கும்படி அவளை வற்புறுத்தி நிற்பது சமூகக்கட்டுப்பாடு, மதக்கொள்கை யென்பதை மகாத்மா கூட அறியாதது வருந்தத்தக்கதே. இத்தகைய நிலையில் அவளுக்கு விவாகரத்து உரிமை கிடைத்தால் அவளது நிலை சீர்ப்பட முடியுமல்லவா?

அவ்வுரிமை யில்லாததாலன்றோ அவன் தன்னிஷ்டப்படி அவளைத் துன்புறுத்துகின்றான். அவன்மீது வழக்குத் தொடரச் சமூகக் கட்டுப்பாடு இடங் கொடுக்கின்றதா? அவள் தன் இயற்கை உணர்ச்சியைப்பூர்த்தி செய்யக் கணவன்வேண்டும் என்பது ஒருபுறமிருந்தாலும், கொடிய புருஷனுடைய கொடுஞ் செயல்களினின்றும் நீங்கிக் கொள்ளவாவது விவாகரத்துச் சட்டம் இடம் கொடுக்குமல்லவா? அவள் வேறு புருஷனை மணக்காவிட்டாலும் சுகமாகவாவது வாழ முடியுமல்லவா? ஆகவே, நாட்டின் தற்கால நிலைமையில் பெண்களுக்கு விவாகரத்து உரிமை அவசியமென்றும், அதனால் சமூகத்திற்கு நன்மையேயன்றித் தீமை விளையாதென்றும் இதன்மூலம் தெரிகின்றது. இதை அன்பர்கள் நன்கு ஆராய்ச்சி செய்து இத்தகைய சட்டம் நிறைவேறும் வண்ணம் முயற்சி செய்தல் நலம்.

பெண் மக்கள் பெருமை- பெண்களும் கற்பும்.

சாமி சிதம்பரனர்

பெண்மக்களுக்கு அமைந்திருக்க வேண்டிய குணங்களில் கற்பு என்னும் குணத்தையே மிகவும் முக்கியமானதாகக் கூறுகின்றனர். ஆனால் கற்பு என்பது என்ன என்பதைப் பற்றிப் பலரும் பலவாறு கூறுவர். அவற்றைப் பின்னர் ஆராய்வோம். முதலில் கற்பு என்னும் சொல்லிற்குப் பொருள் என்ன என்பதை ஆராய்ந்தால் கற்பு கற்றல் என்னும் பொருளில் அமைந்த தொழிற்பெயராகும். கல் என்பது பகுதியும், பு தொழிற்பெயர் விகுதியும் ஆகும். கற்றல் என்றால் எதைக்கற்றல் என்பதுதான் நமது கேள்வி. இக்கேள்விக்கு உலக வாழ்க்கைக்குரிய எல்லாச் செயல்களையும் கற்றல் என்றுதான் நாம் பொருள் கூறுவோம். ஆகவே, கற்பு என்னும் இச்சொல் பெண்களும் ஆண்களைப் போலவே உலகவாழ்க்கையில் எல்லாச் செய்திகளையும் அறிந்து உலகவாழ்க்கையில் ஆண்மக்களைப் போலவே வாழும் உரிமையுடையவர்கள் என்பதைக் காட்டி நிற்கும் சொல்லாகும்.

திருக்குறளில் வாழ்க்கைத்துணை நலம் என்னும் அதிகாரத்தில் இல்லறத்தில் இருக்கின்ற பெண்களுக்கு அமைந்திருக்க வேண்டிய குணங்களைப் பற்றிக் கூறப்படுகின்றது. அதில்,

"இல்லறத்திற்குத் தகுந்த நற்குண நற்செயல்களையுடையவளாகி தன்னைக்கொண்ட கணவனுடைய வருவாய்க்குத் தகுந்தவாறு செலவு செய்யக்கூடியவள் இல்வாழ்க்கைக்குத் துணையாவாள்" என்றும்,

"இவ்வாழ்க்கைக்குத் தகுந்த குணங்கள் மனைவியிடத்தில் இல்லாவிட்டால் அவ்வில்வாழ்க்கை வேறு எவ்வளவு செல்வங்களைப் படைத்திருந்தாலும் பெருமை யுடையதன்று" என்றும்,

"மனையாள் நற்குண நற்செய்கைகளை உடையவளாயிருந்தால் அவ்வில்லறத்தில் இல்லாதது என்ன? அவள் நற்குண நற்செய்கையில்லாதவளாயிருந்தால் அவ்வில்லறத்தில் உள்ளது எது?" என்றும்,

"ஒருவனுக்கு நன்மை என்பது அவனுடைய மனையாளின் நற்குண நற்செயல்கள் என்றும், அவற்றின் ஆபரணம் என்பது அவன் நல்ல மக்களைப்பெறுதல் என்றுங்கூறுவர்" என்றும், இவ்வாறு நான்கு பாடல்களால் பெண்மக்களுக்கு இருக்க வேண்டிய பொதுவான தன்மையைக் கூறிவிட்டு மீதம் ஆறு குறள்களிலும் கற்பைப் பற்றிக் கூறுகின்றார். அதில் "கற்புதான் பெண்களுக்கு வலிமை" என்றும், தெய்வத்தை வணங்காமல் தன் கணவனையே தொழவேண்டும்" என்றும், "தன் கணவன் சுகமடையும்படி அவனுக்கு ஊழியஞ்செய்ய வேண்டும்" என்றும், 'தன் கணவனால் காக்கப்படாமல் தானே தன் கற்பைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்' என்றும், 'மேற்கூறிய கற்புடைய பெண்களே சுவர்க்கத்தைப் பெறுவார்கள்' என்றும், 'கற்புடைய மனைவியைப் பெறாத ஆடவர்க்குப் பெருமை இல்லை' என்றும், கற்பைப் பற்றிக் கூறப்பட்டிருக்கின்றது. இதிலிருந்து திருவள்ளுவரும், கற்பு என்பது 'ஒரு பெண் ஒரு ஆடவனுக்கு அடிமைப்பட்டு அவனுக்கு வேண்டிய ஊழியங்களைச் செய்து கொண்டுதான் தன் விருப்பப்படி ஒருவித இன்பத்தையும் அனுபவிப்பதற்குச் சுதந்தரமின்றி வாழ்வது" என்பதே கருத்தென்பதை அறியலாம்.

ஆனால் திருவள்ளுவர் நூல் செய்த காலத்தில்; "அவர் கொண்ட கொள்கைதான் பெண்களுக்குச் சிறப்பாக அமைந்திருக்க வேண்டியதாக அறிஞர் கருதினர்" என்றெண்ணுதற்கு இடமில்லை. ஏனெனில் திருவள்ளுவர் நினைக்கும் கற்புதான் பெண்களுக்கு இருக்கவேண்டும் என்பது உண்மையாயின், அவரே கற்பு என்பதைப்பற்றித் தனியாக ஒரு அதிகாரம் அமைத்திருக்கலாம், அவ்வாறு அமைக்காமல் "வாழ்க்கைத்துணை நலம்" என்னும் அதிகாரத்தில் கற்பு என்பதைப் புகுத்திக்கூறியது ஆராயத்தக்கதாகும். வாழ்க்கைத்துணை நலம் என்பதற்கு இவ்வாழ்க்கைத் துணைவியின் நன்மை என்பதே பொருளாகும் துணைவர் என்றாலே இருவரும் ஒத்த தன்மையுடையவர் என்று பொருள்படுவதாகும். ஆகவே வாழ்க்கைத்துணை என்னும் பெயர்ப் பொருளையும், திருவள்ளுவர் கூறும் கற்பு என்னும் பொருளையும் ஒப்பிட்டுப் பார்க்குங்கால் இரண்டிற்கும் தொடர்பின்றி இருத்தலை அறிஞர் காணலாம். ஆகையால் திருவள்ளுவர் அக்காலத்தில் இருந்த வைதீகர்களைத் திருப்தி செய்யும்பொருட்டே இவ்வாறு பெண்களை அடிமைகளாக்கும் கற்பு என்பதை "வாழ்க்கைத் துணைநலம்" என்னும் அதிகாரத்தில் புகுத்திவைத்தார் என்று அறியலாம்.

ஆனால் திருவள்ளுவர் ஆண்களையும் சும்மா விட்டுவிடவில்லை. பெண்களுக்கு எவ்வளவு நற்குண நற்செயல்கள் வேண்டுமென்று சொல்லியிருக்கின்றாரோ அவ்வளவு நற்குண நற்செயல்கள் ஆண்களுக்கும் வேண்டும்

என்பதை "அன்புடைமை விருந்தோம்பல் இனியவை கூறல், செய்ந்நன்றி அறிதல், நடுவு நிலைமை, அடக்கம் உடைமை, ஒழுக்கம் உடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை அழுக்காறாமை, வெஃகாமை புறங்கூறாமை, பயனில சொல்லாமை, தீவினை அச்சம், ஒப்புரவு அறிதல், ஈகை புகழ் முதலிய அதிகாரங்களால் இல்லறத்தில் உள்ள ஆண் மக்களுக்கு வேண்டிய குணங்களை யெல்லாம் வற்புறுத்திக் காட்டியிருக்கின்றார். இவற்றுள் "பிறனில் விழையாமை' என்னும் அதிகாரம் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். கணவனையன்றிப் பிற ஆடவனை விரும்பும் பெண் எவ்வாறு கற்பில்லாதவள் என்று இகழப்படுவாளோ, அவ்வாறே தன்மனைவியை அன்றிப் பிறன் மனைவியை விழையும் ஆடவனும் இகழப்படுவான் என்பதை மிகவும் வலியுறுத்திக் கூறுகின்றார்.

(1) "அறிவுடையவர்களிடத்தில் பிறன் மனைவியை விரும்பும் குணம் இல்லை" என்றும், (2) பிறன் மனைவியை விரும்புகின்றவரைப்போன்ற அறிவில்லாதவர் வேறொருவர் இல்லை என்றும் (3) "பிறன் மனைவியைவிரும்புகின்றவர் இறந்தவருக்குச் சமத்துவமாவர்" என்றும் (4) பிறன் மனைவியை விரும்புகின்றவருக்குப் பெருமை இல்லை என்றும் (6) பிறன் மனைவியை விரும்புகின்றவர் அழியாத பழியைப் பெறுவார் என்றும் (6) பிறன் மனைவியைவிரும்புகின்றவருக்குப் பகை, பாவம் அச்சம் பழி யென்ற நான்கும் உண்டாகும். என்றும், (7) பிறன் மனைவியை விரும்பாதவன்தான் ஒழுங்காக இல்லறத்தில் வாழ்கின்றவன் ஆவான்" என்றும், (8)பிறர் மனைவியை விரும்பாதிருத்தலே அறிவுடையவர்க்கு ஒழுக்கமாகும்' என்றும், (9) 'பிறன் மனைவியை விரும்பாதவர்களே நன்மை அடைவதற்கு உரியவர்கள்' என்றும்,(10)பிறன் மனைவியை விரும்பாதிருத்தலே அறமாகும்' என்றும் பிறனில் விழையாமை என்னும் அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கின்றன. இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது கற்பு என்பது பெண்களுக்கு மட்டும் உரியதல்ல என்றும், ஆண் மக்களுக்கும் உரியதென்றும் அறிந்து கொள்ளுகின்றோம். இவ்வனம் திருவள்ளுவர் கூறியவைகளே இருவருக்கும் ஒருவகையான ஒழுக்கத்தையே வலியுறுத்துகின்றபோது, அவரே பெண்கள் ஆண்களுக்கு அடிமையாக இருக்கவேண்டுமென்னும் ஒருவிஷயத்தை மிகைப்படுத்திக் கூறியிருப்பது பொருத்தமற்றதாகும் என்பதே நமது கருத்து.

பிற்காலத்தில் 'கற்பு' என்பது பெண்களுக்கே உரிய குணம் என்று கருதப்பட்டு அதைக்கொண்டு அவர்களை ஆண்மக்கள் அடிமைகளாகும்படி செய்துவிட்டனர் அன்றியும் 'கற்பு' என்பதற்குரிய மற்ற உரிமைகளும் பெண்மக்களுக்குக் கொடுக்கப்படாமல் 'பெண்கள் ஆண்மக்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கவேண்டும் என்ற பொருளில் மாத்திரம் அவ்வார்த்தையை அவர்கள் தலைமீது சுமத்திவைத்தனர். "கற்பெனப்படுவது சொல் திறம்பாமை" என்றும், "பெண்டிர்க்கு அழகு எதிர் பேசாதிருத்தல்" என்றும் கூறிய மொழிகளே பிற்காலத்தினரால் கற்பின் இலக்கணமாகக் கொள்ளப்பட்டு விட்டன.

"கற்பு" என்னும் இவ்விஷயத்தில் ஆரியர்களைக் காட்டிலும் தமிழர்கள் மிகவும் கண்டிப்புள்ளவர்களாக இருந்திருக்கின்றனர். ஆரியர்களின் கொள்கைப்படி ஒரு பெண் தன் கணவனை அல்லாத வேற்றுனுடன் சம்பந்தப்பட்டால்தான் அவள் கற்பழிந்தவளாவாள். இந்த ஒரு காரியம் மட்டிலும் இல்லாமல் ஒருவர் மேல் ஒருவர் ஆசைப்படலாம். ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டிருக்கலாம். ஒருவரை ஒருவர் தொட்டுப் பழகலாம். இவற்றால் கற்புக்கு அழிவு வந்து விடுதல் இல்லை. இதற்கு உதாரணமாகச் சீதையை இராவணன் தொட்டுத் தூக்கிச் சென்றதையும், துரோபதை கர்ணன் மீது ஆசை வைத்துக் கொண்டிருந்ததையும் கூறலாம்.

ஆனால் தமிழர்களோ "ஒரு பெண்ணை அவள் கணவன் அல்லாத வேறொரு ஆடவன் பார்த்து ஆசைப்பட்டாலே அவளுடைய கற்புக்குறைந்து விடும்" என்று கூறி வைத்திருக்கின்றனர். இதிலிருந்தும் மற்றும் பெண்களுக்கு இருக்கவேண்டிய கல்வி, அறிவு, ஒழுக்கங்களை வலியுறுத்தியிருப்பதிலிருந்தும், "பெண்கள், சிறந்த வீரமுடையவராகவும், ஒரு ஆடவன் தன்னைப்பார்த்து ஆசைப்படக்கூடிய அவ்வளவு கோழையாகவும் இருக்கக்கூடாது" என்று ஊகிக்கக் கூடியதாயிருப்பினும், இதனால் பெண்களுக்குப் பிற்காலத்தில் ஏற்பட்ட கஷ்டங்கள் எண்ணற்றனவாகும் இத்தகைய கொள்கையிலிருந்து தான், பெண்கள், வீட்டிற்குள்ளேயே இருக்கத்தக்கவர்களென்பதும், கல்வி கற்பதற்கு உரிமை அற்றவர்கள் என்பதும், உலக விஷயத்தை அறிவதற்கு உரிமை இல்லாதவர்கள் என்பதும், தன் கணவனையன்றி வேறு தெய்வத்தை வணங்குவதற்கு உரிமை பெறாதவர்கள் என்பதும் ஆகிய மூடத்தனமான வழக்கங்கள் கற்பிக்கப்பட்டுவிட்டன என்பதை உணரலாம்.

இது நிற்க "பிறர் பார்த்துக்கெட்ட எண்ணத்துடன் ஆசைப்படாத தன்மையைப் பெண்மக்கள் பெற்றிருக்க வேண்டும்" என்னும் பண்டைத் தமிழர் கொள்கை நன்றாக ஆராய்ந்து பார்த்தால் கீழ்க்கண்ட முடிவுக்கு வருதல் கூடும் இம்முடிபே பழந்தமிழ்ச் சான்றோர்களின் கருத்தாக இருத்தல் வேண்டும். அம்முடிவாவது :-

ஒவ்வொரு பெண் மக்களும், உடற்பயிற்சியும், ஆயுதப் பயிற்சியும் செய்துகொண்டு வீரப் பெண்மணிகளாக விளங்கவேண்டும். இவ்வாறிருந்தால் தான் அவர்களால் விரும்பப்படாத வேறொரு ஆடவன் அவர்கள் மீது கெட்ட எண்ணங் கொண்டு பார்க்கமாட்டான் என்பதேயாகும். இக்கருத்தை,

"சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை"

என்றும்,

"கற்பென்னும் திண்மை" என்றும் திருவள்ளுவர் கூறுவதனாலும் உணரலாம்.

ஆகவே, இதுவரையிலும் கூறியவைகளால் 'கற்பு' என்பது தற்காலத்தில் ஆண்மக்கள் கருதுவதுபோலப் பெண்மக்களுக்கு மட்டும் உரியதன்று என்றும், ஆண் பெண் ஆகிய இருபாலார்க்கும் உரியதே என்றும், கற்பு என்பதன் பொருள் உலக வாழ்க்கையில் இன்புற்று வாழ்வதற்குரிய எல்லாவற்றையும் கற்றுக்கொள்வதே என்றும், ஆகையால் பெண்மக்கள் ஆண்மக்களைப்போலவே எல்லாச் சுதந்தரங்களையும் அடைவதற்கு உரிமை யுடையவர்கள் என்றும், ஆகையால் ஒவ்வொரு பெண் மக்களும், தம்மைத்தாமே அடக்கி ஆளும் ஆண்மையற்ற கோழைகளான, ஆண்மக்களால் துன்புறுத்தப்படாமல் இருக்கும் பொருட்டுத் தேகப்பயிற்சி ஆயுதப்பயிற்சி இவைகளைச் செய்து வீரப் பெண்மணிகளாக விளங்க வேண்டும் என்றும் அறியலாம். இத்தகைய தன்மைகளைப் பெறுதலே பெண் மக்களுக்குக் கற்பாகும்.

மேற் கூறிய உண்மையான கற்பு பெண்களுக்கு வேண்டுமென்று கூறுவதை நாம் மறுக்கவில்லை. எங்கள் சுயமரியாதை இயக்கமும் மறுக்கவில்லை. பண்டைத்தமிழர்களும் மறுக்கவில்லை. ஆனால் "நாங்கள் எப்படியிருந்தாலும் குற்றமில்லை. நாங்கள் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் கல்யாணம் செய்து கொள்ளலாம்; கல்யாணம் செய்து கொண்ட பெண்களைத்தவிர இன்னும் எத்தனை பெண்களிடம் வேண்டுமானாலும் நேசம் வைத்துக்கொள்ளலாம்; பெண்கள் மாத்திரம் அம்மாதிரி இருத்தல் கூடாது, அவர்கள் அடிமைகளாகவே எங்கள் சொற்படி தான் நடக்கவேண்டும்' என்று கூறுகின்ற அறிவற்ற சுயநலம் பிடித்த மொழிகளைத்தான் "அக்கிரமம்" என்று கூறி மறுக்கின்றோம். பெண்களுக்கு எவ்விதமான ஒழுங்கு வேண்டுமென்று நீங்கள் கூறுகின்றீர்களோ, அவ்வாறே நீங்களும் நடந்து கொள்ளுங்கள் என்று தான் சொல்லுகின்றோம்.

ஆண்மக்களாகிய நீங்கள் மட்டும் ஒழுங்காக நடக்காமல் பெண்மக்களை மட்டிலும் ஒழுங்கென்றும், கற்பென்றும் கூறி அடிமைப்படுத்துவீர்களானால், அதை ஒழிக்கத்தான் பெண் மக்கள் பாடுபடுவார்கள். உங்களைப்போலவே பெண் மக்களும் நடப்பதாகக் கூறினால் தான், நடக்கத்துணிந்தால் தான், நடந்தால் தான் நீங்கள் வெட்கமடைந்து யோக்கியர்கள் ஆவீர்கள் என்றுதான் நாம் கூறுகின்றோம். பெண் மக்களும் இவ்வாறே கருதுகின்றனர். ஆகையினால் உண்மை புணர்ந்து மனந்திரும்புங்கள்.

உத்திரவாதம்!

நம்முடைய திருநேத்திர சஞ்சீவி பல மூலிகைகளைக் கொண்டு சித்தர் முறைப்படி தயாரிக்கப்படுகிறது. இது காலரா, பிளேக், சுரம்,ஜன்னி இவைகளை ஒரு மணி நேரத்திலும், பரு, கண் குத்து, பல் வலி முதலிய சகல வலிகளையும் 5, 6 நிமிஷத்திலும் சுகமாக்கக்கூடிய சஞ்சீவி. ஒரு முறை பரீட்சித்தால் இதன் அபூர்வ சக்தியைத் தெரிந்து கொள்ளலாம்.

புட்டி 1-க்கு விலை ரூ. 2-0-0.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

விலாசம்:—

ஆர்.பி. நரசிம்மலு நாயுடு,
191, தெற்கு மாரட்டு வீதி,
மதுரை.

(75)

கடவுள் கடவுளென
காசை துலையாதே

விரைவாத சஞ்சீவி நெய்

இந்த அற்புதமான சஞ்சீவி நெய்யை ஆகாரம் அல்லது காப்பியில் 12 துளி முதல் திரேக வலிமைக்குத் தக்கபடி குறைத்தும் அதிகப்படுத்தியும் காலையில் மூன்றுநாள் உட்கொண்டால் விரேசனமாகி, வாதநீர் வெளிப்பட்டு எப்படிப்பட்ட விரைவாதமும், பீஜ நரம்புகளின் வீக்கமும் கண்டிப்பாய் நீங்குமென்பதற்கும் சிறிதும் ஐயமில்லை, இப்படி இரண்டுமுறை சாப்பிடக்கூடிய 1/8 அவுன்ஸ் புட்டிக்கு விலை ரூ. 2-0-0. வி பி. பிரத்தியேகம். ஒருமுறை பரீட்சித்தவர்களுக்கே இதன் சிறந்த குணம் விளங்கும். குணமில்லை என்று நிரூபிப்பவர்களுக்குப் பணம் வாபீசு செய்யப்படும். அந்நியநாட்டு நண்பர்கள் முன்பணம் அனுப்பவேண்டும்.

ர. நடேச முதலியார் அண்டு சன்,

நெ. 77, பக்காளி பஜார், ஜூலந்தூர், பாக்கிமலை, P. O. மதராஸ்.



"அறிவினர் ஒன்றென்றெண்ணி
அரும்பொருள் எவர்க்கும் ஆக்கி
வைத்திடில் பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
நினைத்தலும் தவிர்ப்பதாயின்
செய்யவும் வேறொன்றுண்டோ?
உலகிற்கு உறுதியான
உபதேசம் ஆகும்தானே"

குடி அரசு

சென்னை 1929 டிசம்பர் 8உ

சுயநல வெறியர்கள் மகாநாடு

சென்னை ஒற்றைவாடை நாடகக் கொட்டகையில் சென்ற மாதம் 30-ந் தேதியன்று சனாதன தர்மிகள் மகாநாடு என்பதாக சுயநல வெறியர்கள் மகாநாடு ஒன்று கூட்டப்பட்ட விஷயத்தை யாவரும் தெரிந்திருக்கலாம். அதில் முக்கியமாய் மனு தர்ம சாஸ்திரத்தை நிலைநாட்டுவதையே கவலையாகக் கொண்டு அதற்கு வேண்டிய முயற்சிகளும் செய்யப்பட்டு அதை அனுசரித்த பல தீர்மானங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. இதை நினைக்கும்போது இன்றைய தினம் நாம் வெள்ளைக்காரர்களுடைய அரசாட்சியிலும் அவர்களுடைய ராணுவக் காப்பிலும் இருப்பதற்கு நம்மை நாமே பாராட்டிக்கொள்ள கடமைப்பட்டவர்களாவோம். இத்தப்படி நாம் சொல்லுவதைப் பற்றி பொறுப்பும் கவலையுமற்ற சிலர் நம்மீது ஆத்திரப்பட்டாலும் படுவார்கள். ஆனால், உண்மையிலேயே துணிந்தவர்கள் யாரோ சில பொறுப்பற்றவர்களுடைய ஆத்திரத்துக்குப் பயப்படுவார்களேயானால் அது முன்னுக்குப் பின் முரணாகத்தான் முடியும். ஆகையால், அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. நிற்க; மேற்படி மகாநாட்டுக்குத் தலைமை வகித்த கல்கத்தாவிலுள்ள ஒரு "தேசிய வாதி"யாகிய திரு. சியாம்சந்திர சக்கரவர்த்தி என்னும் ஒரு வங்காளத்துப் பார்ப்பனர் செய்திருக்கும் அக்கிராசனப் பிரசங்கத்தைப் பார்த்தால் இந்தியப் பார்ப்பனர்களுடைய யோக்கியதையும், அவர்களது மதபக்தி தேசியம் என்பதுவே சுயநல வெறியும் தாராளமாய் விளங்கிவிடும். ஆதலால் அவற்றை முதலில் சுருக்கமாக எழுதி பிறகு தீர்மான சுருக்கத்தையும் எழுதி பிறகு அதைப் பற்றிக் கவனிப்போம்.

அக்கிராசனர் உபந்நியாசமாவது:—

"மதம் கெட்டுப்போய் விட்டது. நமது பழைய சனாதன தர்மத்தை மறுபடியும் நிலை நிறுத்தவேண்டும். ஒரு உண்மையான ஹிந்து என்பவனுக்கு அடையாளம் சனாதன தர்மத்தை நம்புவதேயாகும்.

வேதத்தை நம்பி அதன்படி நடப்பதுதான் ஆஸ்திகனுக்கு அறிகுறியாகும். நமக்கு வேதமே ஆதாரமானது.

வேதத்தின் தத்துவமும், உள்பொருளுமே மனுதர்மசாஸ்திரமாகும். மனுதர்ம சாஸ்திரம் பகவானால் சொல்லப்பட்டதாகும்.

கடவுள் உண்டாக்கிய சட்டம்தான் மனுதர்ம சாஸ்திரமென்பது.

விஞ்ஞான சாஸ்திரமும் இயந்திர சக்திகளும் மனித சமூகத்திற்கு மிகவும் கேடானது. மேல்நாட்டு கொள்கை நமக்கு உதவாது.

சாரதா சட்டம் சோதனை காலமாகும். அதை ஒழித்தாகவேண்டும்.

சிறு வயதில் கல்யாணம் செய்தால்தான் பெண்கள் ஆண்களுக்கு வணங்கி கட்டுப்பட்டிருப்பார்கள்.

அதினால்தான் சாஸ்திரங்களில் பால்ய விவாகம் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. பெண்கள் பூப்பு ஆனபிறகு அவர்கள் உடனே கருத்தரிப்பதை தடுத்தால் அது சிசுக் கொலைக்கு சமானமாகும் என்று பேசி இருக்கிறார்.

தீர்மானங்கள்

(1) சாரதா சட்டத்தை ஒழித்துவிடவேண்டும்.

(2) அதற்காக சத்தியாக்கிரகம் செய்யவேண்டும்.

(3) சனாதனதர்மத்திற்காக ஒரு பத்திரிகை நடத்தவேண்டும்.

(4) மதத்தில் அரசாங்கமாவது அரசியல் ஸ்தாபனங்களாவது பிரவேசிக்கக் கூடாது.

(5) சட்டசபையில் வர்ணாச்சிரம தர்மத்திற்கு விரோதமாகவு எவ்வித சட்டமும் செய்யக்கூடாது.

(6) மனுதர்மத்தைக் காப்பாற்றுகிறதாக வாக்களிப்பவர்களுக்கே சட்டசபைக்கு ஓட்டுக்கொடுக்கவேண்டும்.

(7) கலப்புவிவாக சட்டத்தையும் சம்மத வயது சட்டத்தையும் கண்டிப்பதோடு சட்டங்களையும் மாற்றிவிட வேண்டும்.

(8) விவாகங்களை ரத்துசெய்யக் கூடாது என்பவை போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த மகாநாட்டில் இருந்தவர்கள் திருவாளர்கள், எஸ். சத்தியமூர்த்தி, கோவை, சி. வி. வெங்கடரமணய்யங்கார், டி. ஆர். ராமச்சந்திர அய்யர், வி. வி. ஸ்ரீனிவாசய்யங்கார் முதலிய "தேசியவாதி"களாவார்கள்.

இந்த இருபதாவது நூற்றாண்டில் இந்திய தேசத்தில் மாத்திரம் இந்திய ஜனத்தொகையில் 100க்கு 3 வீதம் ஜனத்தொகையுள்ள ஒரு சிறு கூட்டத்தார்கள் இவ்வளவு தைரியமாக சுமார் 2000 வருடத்திற்குமுன் ஏற்படுத்தப்பட்டதாகச் சொல்லப்படும் கொள்கைகளை இன்றைய தினம் புதுப்பித்து மக்களின் மீது சுமத்தி ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்று நினைப்பார்களேயானால் அவர்களது மூடத்தனத்திற்கும் பேராசைக்கும் வெட்கம் கெட்ட தனத்திற்கும் எதை உதாரணமாய்ச் சொல்லுவது என்பது நமக்கு விளங்கவில்லை. மேல்கண்ட நூற்றுக்கு மூன்றுபேர்கொண்ட பார்ப்பனர்கள் தங்கள் சமூகத்திற்கு மாத்திரம் எந்தவிதமான கொள்கைகளையோ சாத்திரங்களையோ மதங்களையோ வைத்துக்கொள்ளுவதானால் நமக்கு அதைப் பற்றி சிறிதும் கவலை இல்லை, அப்படிக்கில்லாமல் எங்கோ நாடோடிகளாகவும், பிச்சைக்காரர்களாகவும் காட்டுமிராண்டிகளாகவும் மலைச்சாரலில் வரன்முறை இல்லமல் லம்பாடிகள்போல் திரிந்துகொண்டிருந்த ஒரு சிறு கூட்டத்தார்கள் வயிறு வளர்ப்பதற்காக நமது நாட்டிற்குள்வந்து குடியேறி இந்நாட்டு மக்களை ஏமாற்றி மதம் என்றும், வேதம் என்றும், சாஸ்திரம் என்றும், தர்மம் என்றும், தங்கள் ஆதிக்கத்திற்கும் சோம்பேறி வயிற்றுப் பிழைப்புக்கும் ஏற்றபடி என்னென்னமோ ஏற்பாடுகளைச் செய்துகொண்டு அவைகளுக்கெல்லாம் தாங்களே அதிகாரிகள் என்றும், தங்களுக்குத்தான் அவ்வித யோக்கியதை உண்டென்றும், ஆதலால் தாங்கள் மேன்மையான ஜாதியார்கள் என்றும், மற்றவர்கள் இழிவான ஜாதியார்கள் என்றும், தங்களுடைய வாழ்வுக்காகவே உலகத்தில் மற்றவர்கள் அடிமைகளாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றார்களென்றும், இவை அனைத்தும் கடவுள் கட்டளை, கடவுள் செயல் என்றும் சொல்லிக்கொண்டு வாழ்ந்து வந்ததல்லாமல், இனியும் அந்தப்படியே இருக்க வேண்டுமென்பதாகவும் முயற்சி செய்வதென்றால், கடுகளவு சுயமரியாதையோ, அறிவோ உள்ள மக்கள் இதை சகித்துக் கொண்டிருக்க முடியுமாவென்று கேட்கின்றோம். முதலாவது, மதம் என்பதில் இந்து மதம் என்றால் என்ன என்கின்ற கேள்விக்கு ஒரு சனாதன தர்மியாவது சாஸ்திரியாவது பதில் சொன்னவர்களே அல்ல. எனவே, அஸ்திவாரத்திலேயே அடியோடு வெறுமையாய் இருக்கின்ற மதத்தைச் சொல்லி ஏமாற்றுவதல்லாமல் அந்த மதத்திற்கு ஆதாரம் வேதம் என்று ஒரு ஆபாசக் களஞ்சியத்தை சொல்லிக்கொண்டு அதை அவர்களை (அந்தப் பார்ப்பனர்களை) தவிர மற்றவர்கள் பார்க்கவோ, படிக்கவோ, கேட்கவோ கூடாதென்று சொல்லிக் கொண்டு இருப்பதுடன், அதை எவன் நம்புகின்றானோ எவன் ஒப்புக்கொள்ளுகின்றானோ அவன் தான் இந்துவென்றும், அப்படிப்பட்ட இந்துவுக்கு ஏற்பட்ட கொள்கைகளே சனாதன தர்மமென்றும், அச்சனாதன தர்மமே மனு தர்ம சாஸ்திரமென்றும், அம்மனு தர்மசாஸ்திரமே வேதத்தின் தத்துவமும் உள் பொருளுமாகுமென்றும் சொல்லி அதற்கு 20 கோடி மக்களைக் கட்டுப்படுத்தி அதில் 6 கோடி மக்களை கண்ணில் காணக்கூடாதவர்கள், தெருவில் நடக்கக் கூடாதவர்கள், தீண்டாதவர்கள் என்கின்ற கொடுமைக்குள்ளாக்கி மீதி 14 கோடியில் 13 கோடி மக்களை சூத்திரர்களென்று அதாவது, பார்ப்பானின் தாசி மகன், பரம்பரை அடிமை, படிக்கக் கூடாதவன், சொத்து வைத்திருக்கக் கூடாதவன், பார்ப்பனர்களின் எச்சிலைச் சாப்பிட்டுக் கொண்டு அவன் கிழித்துக் கழித்த கந்தலைக் கட்டிக் கொண்டிருக்க வேண்டியவன் என்பதாக இழிவுபடுத்தி வைத்துக்கொண்டு இருப்பதுடன், இந்தக் கொள்கையை நிலைநிறுத்த இன்றையதினம் மகாநாடு கூட்டி தீர்மானங்கள் நிறைவேற்றுவதென்றால் இந்த நாட்டில் கடுகளவு சுயமரியாதை உடையவர்கள்கூட ஒருவருமில்லையென்று தானே பொருளாகின்றது. இவ்வளவு கொடுமையுள்ள மக்கள் ருஷியாபோன்ற நாட்டிலிருப்பார்களேயானால் சாலைமரங்களில் கழுத்துக்குச் சுருக்குபோட்டு தொங்கவிட்டு உயிருடன் கழுகுகளும் காக்கைகளும் கொத்திக்கொத்தித் தின்னும்படியாக வல்லவா செய்யப்பட்டிருப்பார்

ரோஜா முத்தையா

கள் என்பதில் சிறிதாவது சந்தேகம் கொள்ள முடியுமா என்று கேட்கின்றோம். மனுதர்ம சாஸ்திரம்தான் வேதம் என்றும், வேதம்தான் இந்துமதத்திற்கு ஆதாரம் என்றும், இப்போது இந்துக்கள் என்று சொல்லப்படும் 20 கோடி மக்களில் தங்களைத் தவிர பாக்கி 19 கோடி மக்களும் மனு தர்ம சாஸ்திரப்படிக்குத்தான் நடக்கவேண்டும் என்றும், இந்தப்படிக்கே சட்டமும் ஆட்சியும் இருக்கவேண்டும் என்றும் கோருகின்ற ஒரு கூட்டத்தாரைவிட உலகில் அயோக்கியர்களும் கொள்ளைக் கூட்டத்தார்களும் கொலை பாதகர்களும் வேறு யாராவது இருக்க முடியுமா என்பதை யோசித்தால் சனாதன மகாநாட்டின் யோக்கியதை இன்னதென்று தெளிவாய் விளங்கும். இந்து மதத்தின் அயோக்கியத்தனமான கொள்கைகள் இப்பார்ப்பனர்களால் இந்நாட்டில் அமுல்படுத்தாமல் இருந்திருக்குமானால் இந்துக்களில் பார்ப்பனர்களில் மாத்திரம் 100-க்கு 22¼ பேர்கள் ஆங்கில பாஷை கற்றவர்களாகவும், பார்ப்பனரல்லாதவர்களில் 100-க்கு ¼ பேர்கள் மாத்திரம் ஆங்கிலம் கற்றவர்களுமாக இருக்க முடியுமா என்பதை யோசித்துப் பார்க்க விரும்புகின்றோம்.

அதுபோலவே இந்து மதம் இந்தியாவிலுள்ள பார்ப்பனரல்லாதார்களை எவ்வளவு இழிவு தன்மையிலும் ஈன ஸ்திதியிலும் வைத்திருக்கின்றது என்பதை மற்றநாட்டு ஜனங்களுடன் நம்மை ஒப்பிட்டு பார்த்தால் விளங்காமல் போகாது. மற்றும் சனாதன தர்மம் அழிவுபட்டதற்குக் காரணம் விஞ்ஞான அறிவும் (அதாவது சைன்ஸ் அறிவும்) இயந்திர சக்தித் தொழிலுமே காரணம் என்றும், அவைகளை வளரச்செய்யக் கூடாதென்றும், தலைவர் சொல்லுவதென்றால் அக் கூட்டத்தின் வஞ்சகத் தனத்திற்கும் கெட்ட புத்திக்கும் நாம் வேறு எதை ஒப்பிடுவது என்பதே நமக்கு விளங்கவில்லை. விஞ்ஞான சாஸ்திரமும் யந்திர சக்தி தொழில் முறையும் உள்ள அமெரிக்கா தேசத்திலுள்ள ஜனங்கள் சராசரி நபர் ஒன்றுக்கு வருஷம் ஒன்றுக்கு இரண்டு ஆயிரம் ரூபாய் வீதம் வரும்படி சம்பாதிக்கின்றார்கள். அதாவது, நபர் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு நூற்று அறுபத்தாறு ரூபாய் வீதம் சம்பாதிக்கின்றார்கள். சனாதன தருமம் தோன்றிய இந்த நாட்டில் வருஷம் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு சராசரி 72-ரூபாய், அதாவது மாதம் 1-க்கு பேர் ஒன்றுக்கு ஆறு ரூபாய் வீதந்தான் சம்பாதிக்கின்றார்கள். மற்றும் உயர்ந்த தத்துவங்களும் பகவானுல் வேத கட்டளைகளும் மனு தர்மசாஸ்திரங்களும் உண்டான இந்த நாட்டில் நூற்றுக்கு ஏழு பேர்களே படித்திருக்கின்றார்கள். ஆனால், "நீச்ச நாடாகிய" மேல் நாட்டில் நூற்றுக்கு நூறு பேரும் படித்து நமது நாட்டிலும் சிலர் படிக்க மேல்நாட்டார் பணமும் முயற்சியும் மதமும் வேலை செய்கின்றது. அன்றியும் அந்த மக்களின் சராசரி ஜீவிய வயது 52ஆக இருக்கின்றது. பகவான் தர்மத்தை நேரில்வந்து உபதேசித்த இந்த நாட்டில் சராசரி ஜீவிய வயது 25ஆக இருந்துவருகின்றது. எனவே, பகவானின் சனாதர்மம் உள்ள இந்திய நாட்டிற்கும் அதில்லாத மேல் நாட்டிற்கும் கல்வியிலும் செல்வத்திலும் ஜீவவாழ்விலும் மாத்திரம் இவ்வளவு வித்தியாசமிருக்குமானால் மற்றவைகளைப் பற்றி நாம் சொல்லவேண்டுமா என்று கேட்கின்றோம். ஆகவே, இவ்வித வித்தியாசத்திற்கு இச்சனாதன தர்மிகள் என்ன காரணம் சொல்லுகின்றார்கள் என்பதே நமது முக்கிய கேள்வியாகும்.

ஒரு பகவானும் ஒரு மதமும் ஒரு தர்மமும் அப்பகவானையும் தர்மத்தையும் மதத்தையும் சேர்ந்த எல்லா மக்களுக்கும் ஒன்று போன்ற கொள்கையையோ நீதியையோ பலனையோ கொடுக்கவில்லையானால், அப்பகவானும் மதமும் தர்மமும் யோக்கியமானதா அல்லது அயோக்கியமானதா என்பதைப்பற்றி வாசகர்களே அறிந்து கொள்ளவிட்டு விடுகின்றோம். அன்றியும் அப்பகவானையும் மதத்தையும் தர்மத்தையும் அடியோடு அழிக்க வேண்டியதா அல்லது ஒரு சிறு வேலையாவது விட்டுவைக்கவேண்டியதா என்பதையும் முடிவு செய்யும் பொறுப்பையும் வாசகர்களுக்கே விட்டு விடுகின்றோம். இனி, அம்மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைப்பற்றி சிறிது கவனிப்போம். முதலாவதாக சாரதா சட்டம் ஒழிக்கப்படவேண்டுமாம். அதாவது பெண்கள் புருஷர்களுக்கு அடங்கி நடப்பதற்காகவே சிறு வயதில் குழந்தைப்பருவத்திலேயே கலியாணம் செய்யும் வழக்கத்தை பெரியோர்கள் ஏற்படுத்தினார்களாம். ஏனெனில், பெரிய பெண்களான பிறகு கல்யாணம் செய்தால் புருஷர்களுக்கு அடங்கிநடக்கமாட்டார்களாம். ஆகவே பெண்களை ஆண்கள் அடிமைகளாக கொள்ளவே இம்மாதிரியான சாஸ்திரங்களை எழுதிவைத்துக்கொண்டு அவைகளை "பகவான் சொன்னார்" "ரிஷிகள் கேட்டுக்கொண்டிருந்தார்கள்" பாராசர் பரப்பினார்" என்று சொல்லி இதுவரை மக்களை ஏமாற்றி வந்திருக்கிறார்கள் என்பது இப்போதாவது மக்களுக்கு விளங்கி இருக்கும். இத்தருணத்தை எப்படியோ தன்னை அறியாமலே தலைவர் கக்கிவிட்டார். என்றாலும் பாலியவிவாகம் கூடாது என்பதற்குக் காரணமாக தவிர பெண்கள் பக்குவமானவுடன் புணர்ச்சிக்கு அனுமதிக்காவிட்டால் அதனால் அநேக குழந்தைகள் உற்பத்தியாவது தடுக்கப்பட்டு சிசுக்கொலையாகிவிடுமாம். ஒரு பெண் 14 வயதில் பூப்பு எய்தி 45-வது வயதில் சாந்தி முகூர்த்தமாவதற்குள் குழந்தை பிறப்பது தடைப்படுவதால் சிசுக் கொலை ஏற்படுமானால் 10-வயது முதல் 50-வயது வயதுவரை உள்ள விதவைகள் என்னும் பேரால் பத்து லட்சக்கணக்கான பெண்களை கர்ப்பமுண்டாகாமல் தடுப்பதாலும் தப்பித் தவறி தெரியாமல் கர்ப்பமுண்டாகி விட்டால் ஒரு மாதம் முதல் பத்து மாதம் வரை அக்கர்ப்பங்களை அப்பெண்களும் தாய் தகப்பன்மார்களும் அழிப்பதாலும் பெற்ற குழந்தைகளை கழுத்தைதிருகுவதினாலும் எத்தனை சிசுக்கொலை ஏற்படுகின்றது என்பதை உலகம் அறியாதா என்று கேட்கின்றோம். தவிர, சனாதன தர்மத்திற்கு சத்தியாக்கிரகம் செய்யவேண்டுமென்றும், பத்திரிகை ஆரம்பிக்கவேண்டும் என்றும் தீர்மானித்திருக்கின்றார்கள். இவ்விரண்டையும் நாம் மேன தானத்துடன் வரவேற்கின்றோம். ஏனெனில், நாம் இதைத்தான் சொல்லி வந்திருக்கின்றோம். அதாவது, பெண்களுக்கு உண்மையான விடுதலை ஏற்பட வேண்டுமானால் பாலிய விவாகம் கூடாது என்பதும் பெண்ணுக்கும் ஆணுக்கும் அதிக வயது வித்தியாசம் கூடாது என்பதுமேயாகும். சனாதன தர்மத்தை நாம் பத்து வருஷத்தில் ஒழிப்பதானால் பார்ப்பனர்கள் சத்தியாக்கிரகமும் பத்திரிகையும் நடத்துவதினால் சனாதன தர்மம் ஐந்து வருஷத்திலேயே ஒழிந்து போகும் என்கின்ற தைரியம் நமக்கிருக்கின்றது. தவிர மனுதர்ம சாஸ்திரத்தை ஆதரிக்கின்றதாக வாக்குக் கொடுக்கின்றவர்களுக்கே சட்டசபை ஓட்டு கொடுக்க வேண்டுமென்கின்ற தீர்மானமும் நமக்கு மகிழ்ச்சியையே கொடுக்கின்றது. ஏனெனில், சுயராஜ்யம் என்பதும், தேசியம் என்பதும் பார்ப்பன ராஜியம்தான் என்றும், அதுவும் மனுதர்ம ராஜியம்தான் என்றும் நாம் சொல்லி வந்ததின் உண்மை இந்த சனாதன மகாநாட்டின் இத்தீர்மானத்தால் வெளியானதற்கு யாரால்தான் மகிழ்ச்சியடையாமலிருக்கமுடியும்? அன்றியும் தீவிரதேசியவாதியும் பூரணசுயேச்சைவாதியும் "சுயராஜ்ஜியம் எனது பிறப்புரிமை" என்ற கொள்கையுடையவருமான திரு. சத்தியமூர்த்தி அவர்களின் சுயராஜ்ஜியமும் தேசியமும் பூரணசுயேச்சையும் பிறப்புரிமையும் இன்னதுதான் என்றும், அவரைசட்டசபைக்கு தெரிந்தெடுத்தனுப்பும் யோக்கியர்களின் கருத்து இன்னதுதான் என்றும் நன்றாய் விளங்க சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது.

தவிரவும் மனுதர்மவாத தேசியவாதிகளே சட்ட சபைக்கு போகும்படியான ஒருகாலம் வருமானால் அந்த சந்தர்ப்பமானது ஒரு ஐந்து வருஷத்திற்குள் நமது நாட்டிற்கு பொது உடமைக் கொள்கையும் அபேதவாதக் கொள்கையும் சம சொத்துக் கொள்கையையும் கொண்டு வந்துவிட்டுவிடவோ, அல்லது இராணுவ ஆட்சியை கொண்டு வந்துவிடவோதான் செய்யுமே ஒழிய, ஒருக்காலும் நமது நாட்டில் மனுதர்ம ஆட்சி ஒரு ஐந்து நிமிடம் கூட இருக்கமுடியாது என்று தைரியமாய் உறுதி கூறுவோம். கடைசியாக நமது நாட்டிற்கு சுயமரியாதை இயக்கம் எவ்வளவு அவசியம் என்பதும் வேதங்களும், மனுதர்ம சாஸ்திரங்களும் அவைகளை மக்களுக்குக் கொடுத்தபகவான்களும் அழிந்து தீரவேண்டியது எவ்வளவு அவசியமென்றும் பொது மக்கள் உணர ஒரு அருமையான சந்தர்ப்பத்தைக் கொடுத்த சகல வேதியர்கள் மகாநாடான சனாதன தரும மகாநாட்டிற்கு நமது நன்றியறிதலை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஸ்திரீகள் மகாநாடு

ஸ்ரீமதி மாலதிபட்டவர்த்தன் கூறும் விவரம்

ஸ்ரீமதி மாலதி பட்டவர்த்தன் நமக்கெழுதியுள்ள கடிதத்தின் முக்கிய சாரமாவது:—சமீபத்தில் சென்னையில் கூடிய ஸ்திரீகள் மகாநாட்டில் 30 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றில் ஒரு தீர்மானத்தின் ஒரு பாகத்தைப்பற்றி மட்டும் பத்திரிகைகளும் தனிப்பட்ட நபர்களும் விசேஷ கிளர்ச்சி செய்து வருகின்றனர். அந்த ஒரு சிறு பகுதியைக் கொண்டே இயக்கம் பூராவும் மூட்டாள்தனமானதென்றும் அநுபவ சாத்தியமற்றதென்றும் கண்டித்துவிடுகின்றனர். ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் ஒரேவிதமான ஒழுக்க முறையிருக்க வேண்டுமென்பதும் இருவருக்கும் சரிசமமான சுதந்தரம்

சோமசுந்திரம் செட்டியார்

கோயமுத்தூர் காளீஸ்வர மில்லை ஏற்படுத்தினவரும், மற்றும் பல பெரிய மில்லுகளையும் நிர்வாகம் செய்து வந்தவருமான திருவாளர் தேவகோட்டை திவான்பகதூர் பி. சோமசுந்திரம் செட்டியார் அவர்கள் திடீரென்று மரண மடைந்ததைக்கேட்டு நாம் மிகுதியும் துயர் உறுகின்றோம். திரு. சோம சுந்திரம் அவர்கள் தென் இந்தியாவில் ஒரு ஒப்பற்ற மனிதராவார். அவருக்குள்ள நிருவாக சக்தி வேறு ஒருவரிடமும்காணமுடியாது. மேல்நாட்டு நிருவாக நிபுணர்களை விட சிறந்தவர் என்றே சொல்லலாம். ஒரு இந்தியர் எவ்வளவு பெரிய தொழில் வேண்டுமானாலும் செய்ய சக்தி உள்ளவர் என்பதை தென்னிந்தியாவுக்கு அவரே வெளிப்படுத்தினார். ஆகவே, அவரது பிரிவால் தென் இந்தியா ஒருபெரிய வியாபார நிர்வாக நிபுணரை இழந்தது என்றே சொல்லவேண்டும். அவரது குமாரரான திரு. சாந்தப்ப செட்டியாருக்கு நமது ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இருக்கும்படி விவாகரத்து சட்டம் இயற்றப்பட வேண்டுமென்பது தான் அந்த ஒரு பாகத்தில் அடங்கிய தீர்மானத்தின் கருத்து. 'விவாகரத்து' என்ற அந்தவார்த்தை பொதுஜனங்களிடையே ஒருவகையான தப்பபிப்பிராயத்தையும் கிளர்ச்சியையும் வருத்தத்தையும் உண்டுபண்ணி விட்டன. எங்களில் சிலர் அத்தீர்மானத்தை ஆதரித்துப் பேசியதாலும் அதற்குச் சாதகமாக ஓட்டுகொடுத்ததாலும் நாங்கள் நல்லொழுக்கத்தையே கெடுத்துவிடப் பார்ப்பதாகக் கூறுகின்றனர். என்னை அத்தீர்மானத்தைப் பிரேரேபிக்கும்படி சொன்னார்கள். நான் மிக்க சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டேன். ஏனெனில், இந்தியாவில் ஆண்களுக்கு ஒருவித ஒழுக்க முறையும் பெண்களுக்கு மற்றொருவிதமான ஒழுக்க முறையுமிருப்பதால்தான் ஸ்திரி புருஷர்களுக்கிடையே சச்சரவுமிருந்து குடித்தனத்தில் அமைதியில்லாது போகிறதென எனக்குத் தோன்றியதாலும் பால்ய விவாகத்தாலும் கட்டாயப்படுத்தி கலியாணம் செய்வதாலும் துக்கமும் தொல்லையும் குற்றங்களும் புகுவதாக நான் கருதியதாலும் அத்தீர்மானத்தைக் கொண்டுவர சந்தோஷமாக ஏற்றுக்கொண்டேன். இங்கிலாந்தைப்போல் இங்கு விவாகரத்து வழக்குகள் அதிகமாக வில்லையெனச் சொல்லப்படுகிறது. ஆனால், கைவிடப்பட்ட மனைவிகளும் கொடுமைக்குள்ளாகிவரும் மனைவிகளும் எத்தனை பேரிருக்கிறார்கள் என்பது தெரியுமா? கணக்கெடுத்தால் அங்கு விவாகரத்து கோரும் பெண்களைவிட மேற்சொன்ன கஷ்டங்களுக்காளாகிவரும் ஸ்திரீகளின் தொகை அதிகமாகவிருக்கும், விவாகரத்து சட்டம் செய்யப்பட்டவுடன் ஒழுக்கமின்மையும், குழப்பமும் மதவட்டியக் கேடும் ஏற்படுமெனச் சிலர் பயப்படுகிறார்கள். விவாகரத்து சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் ஒவ்வொரு மனைவியும் அவரவர்கள் புருஷன்மாரை விலக்கிவிட்டு வேறு புருஷனைக் கலியாணஞ்செய்துகொள்ளுவாளென அவர்கள் பயப்படுகிறார்களா? புருஷனும் மனைவியும் ஒருயிரும் ஈருடலுமாக இருக்கவேண்டுமென்பது புராதனக் கொள்கை. இருவரும் இல்லற தர்மபாரத்தைச் சமமாகப் பகிர்ந்துகொண்டு அதனை நடத்திவரவேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. இது சரியானதே. புருஷர்களும் இக்கொள்கைப்படி நடக்கவேண்டியது அவசியமல்லவா? இந்தக் கொள்கைப்போல் மேல்நாட்டிலும் ஸ்திரீகள் கௌரவிக்கப்படுவதில்லையெனச் சொல்லப்படுகிறது. இது புராதன நூல்களைக்கொண்டு சொல்லப் படுகிறதே ஒழிய அநுபவத்தில் அங்ஙனமில்லை. இங்கு நாங்கள் அடிமைகளாகவே நடத்தப்படுகிறோம். எத்தனையோ இளம் வயது மனைவிகள் தங்கள் புருஷர் [illegible] செலுத்த அவைதையும் தங்களைப் புறக்கணிப்பதையும் கண்டு பொறுக்காமல் உயிர்விட்டிருக்கிறார்கள். புருஷன்மாருடன் சந்தோஷமாக இல்லறத்திலிருந்து குடும்ப காரியங்களைச் சந்தோஷமாகக் கவனித்து வருபவர்கள் மேற்சொன்ன விதமான கஷ்டத்திலுள்ள தங்கள் சகோதரிகளின் நிலையைக் கவனிக்க வேண்டாமா? முதலில் ஆண் பிள்ளைகள் ஒரு மனைவி யிருக்கையில் வேறு மனைவிகளைக் கலியாணம்செய்துகொள்ளக் கூடாதெனச் சட்டம் செய்யவேண்டும். ஒரு சிறு பெண்ணுக்கு அவளது தகப்பனார் 16 வயதுவரை படிக்க அநுமதிக்க வேண்டுமென உறுதி வாங்கிக் கொண்டு ஒருவனைப் பார்த்துக் கலியாணம்செய்து கொடுத்தார். கலியாணம்முடிந்தபின் மாப்பிள்ளை அப்போதே பெண்ணைத் தன்னுடன் அனுப்ப வேண்டுமென்று கேட்டார். தகப்பனார் அனுப்ப மறுத்தார். மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் பலாத்காரம் உபயோகிக்கவும் பார்த்தார்கள். காரியம் பலிக்கவில்லை, கடைசியில் அம்மாப்பிள்ளை வேறு ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டார். பாவம்! முதல் மனைவி தகப்பன் உதவியால் இப்போது பி. ஏ. வகுப்பில் படித்துவருகிறாள். இவள் கதி என்ன? இவள்விரும்பினாலும் இனி ஒரு கலியாணம் செய்து கொள்ள சாஸ்திரம் இடம்கொடுக்க வில்லை, இப்படிப்பட்ட நிலையில் ஆறுதல் கூற பெற்றோருமில்லாமல் பரிதவிக்கும் பெண்கள் எத்தனையோ பேரிருக்கின்றனர். குடும்பக் கட்டுப்பாடு குலைந்துபோவதாலும் புருஷன்மார்கள் கைவிடுவதாலும் வாலிபப் பெண்கள் பலர் வ்யபசார விடுதிகளில் போய் சேர்ந்துவிடுகின்றனர். ஒரு லட்சியம் என்றால் இருதாரப்பாரும் அதை மதித்து நடக்கவேண்டும். ஒருவர் மட்டும் மதிக்கவேண்டுமென வற்புறுத்துவதும் மற்றொருவரை இஷ்டப்படி நடக்கவிடுவதும் முறையற்றது. பெண்ணிடமிருந்தும் எதிர்பார்க்கப்படும் சிலவ்கள் யாவும் ஆண்மக்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட வேண்டியது அவசியம். தன்னிஷ்டப்படி ஒருவர் மனைவியை புறக்கணித்து விட்டு அதற்காக கண்டிக்கப்படாமலே ஆநந்தமாகப் போய்விடுகிறார். வேறு ஒரு பெண்ணிடம் சேர்ந்து கர்ப்போற்பத்தி செய்து விடுகிறான். அவனைக் கண்டிப்பாரில்லை. சமூகத்தாரும் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். ஆனால், அப்பெண்ணின் கதி என்ன? அதை நினைத்துப் பார்க்கவேண்டும். நமது நாட்டிலேயே கிறிஸ்தவர்களும், முகம்மதியர்களும், பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்தவர்களும் விவாக விலக்கு சட்டத்தை அனுஷ்டிக்கலாமெனச் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் அவர்கள்யாவரும் துன்மார்க்கர்களாகவிருக்கிறார் என சொல்ல முடியுமா? அவர்கள் யாவரும் கௌரவமாகவே வாழ்ந்து வருகின்றனர். சிவில் விவாகச்சட்டப்படி மணம் செய்துகொண்டவர்களும் சுகமாகத் தான் ஒன்றுபட்டு வாழ்ந்துவருகிறார்கள். அவர்கள் விவாகரத்து செய்துகொள்ள உரிமைபெற்றிருந்தும்மனம் போனபடி விவாகரத்து செய்துகொண்டதாகத் தெரியவேயில்லை. ஹிந்துக்கள் மாத்திரம் இதற்குப் பயப்பட வேண்டிய காரணம் இன்னதெனத் தெரியவில்லை. நாங்கள் அன்றையமகாநாட்டில் வெளிப்படையாக சிலரது அப்ரீதியைத் தேடிக்கொள்வதையும் கவனிக்காமல் திக்கற்ற சகோதரிகளின் கஷ்டத்தைப் போக்கப்பரிகாரம் தேட முயன்றோம். பெண்களின் நிலைமை உள்ளபடி அநுதாபத்துடன் உணர்ந்து சற்றுசிந்தித்துப்பார்த்தால் நாங்கள் கூறுவதின் உண்மை விளங்கும்.

ஈரோடு:—இவ்வூர் திரு. குழந்தைவேல் பிள்ளையவர்களின் பெரிய தாயாரிறந்து போன 16-ம் நாள் சடங்கை 9—11—29 ல் எவ்விதப் புரோகிதருமன்னியில் 500 ஏழைகட்கு உண்டி அளித்து பல எதிர்ப்புகளுக்கிடையும் அஞ்சாமல் நல்ல முறையில் நடத்தினார். அவருக்கு உதவியாயிருந்த திரு. டி. எ. அங்கமுத்துப் பிள்ளையை அனைவரும் போற்றுகின்றனர் என ஒரு சுயமரியாதை அன்பன் எழுதுகிறார்.

றேப்பி பவுடர்

இஷ்டப்படி

அநுபவிக்க

சுகம்! சுகம்!! சுகம்!!!

கற்ப மூலிகைகளால் செய்தது. காப்பி போன்ற மணம் வாய்ந்தது. (வி. பி. வேறு)

½ சேர் டின் 3	ரு.	1	0	0
டஜன் ½	ரு.	1	12	0

S. V. ராஜப்பா,
றேப்பி பாக்டரி, பழனி, S.I.

ஈரோடு டி. மு. கோர்ட்டு 1929 வருஷத்திய அசல் நெ. 719

வாதி:—கஸ்பா ஈரோட்டிலிருக்கும் K. A. S. & Co., by its Partner P.S. அசன் சாயபு.

பிரதிவாதி:—ஈரோடு தாலுக்கா தென் முகம் வெள்ளோடு கிராமம், ஞானி பாளையத்திலிருக்கும், ராமசாமிக் கவுண்டன், மகன் ஞானிக் கவுண்டன்.

மேற்படி நெம்பர் பிரதிவாதிக்கு. வாதிக்காக வாதி, வக்கில் E. V. நஞ்சப்ப செட்டியார் தெரிவிப்பதாவது:—

நீர் வாதிக்கு 30-9-1926 தேதியில் எழுதிக்கொடுத்திருக்கும் புரோநோட்டுப்படி உம்மால் ரூ. 940-0-0 கிடைக்கவேணுமாய்த் தாவா செய்து விசாரணைக்காக 12-12-1929 தேதி வாய்தா போடப்பட்டிருக்கிறது. மேற்படி தேதி நீர் ஆஜராகத்தவறினால் ஒரு கட்சியாய்த் தீர்மானிக்கப்படும்.

ஈரோடு, 3—12—29 } E. V நஞ்சப்ப செட்டியார், வாதி வக்கீல்.

அன்பார்ந்த நண்பர்களே!

இங்கிலீஷ் பாஷையை சுயமாயும் சுலபமாயும் கற்றுக்கொள்வதற்கான பல புஸ்தகங்களும் தற்கால நாகரீகத்துக்கும் அனுபவத்திற்கும் பொருத்தமான சட்ட திட்டங்கள், சாஸ்திரங்கள், சாமான்கள், மருந்துகள் அடங்கிய எங்கள் கேட்லாக்குக்கு எழுதினால் உடனே அனுப்புகிறோம்.

வி. எஸ். கே. சுவாமிஅண்ட்ஸன்ஸ்,
புக்செலர்ஸ், விளாத்தி குளம்.
(வயா) கோயில்பட்டி, எஸ். ஐ. ஆர்.

குமரன்

காரைக்குடி தனவணிக நாட்டில் பிராமணரல்லாதார் முன்னேற்றத்துக்காக உழைக்கும் சிறந்த செந்தமிழ்ப்பத்திரிகை.

அடிமை வாழ்வைப் போக்கிக் குருட்டு நம்பிக்கையை நீக்கி, அறிவுச் சுடர் கொளுத்தும் கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகின்றது.

வருடச் சந்தா விவரம்:—
வாரப்பதிப்பு ரூ. 5—0—0
மாதப்பதிப்பு ரூ. 1—8—0

மானேஜர் குமரன், காரைக்குடி. (எ.ஐ)

பகுத்தறிவு

கூடிய விரைவில் "குடி அரசு" பதிப்பகத்தாரால் வெளிவரப் போகும் மாதப்பத்திரிகை.

இதில் பகுத்தறிவில் சிறந்த பல அறிஞர்களின் கட்டுரைகளும் 'சித்திரபுத்திரன்' வேடிக்கை சம்பாஷணைகளும் ஏராளமாக வெளி வரும். இப்பொழுதே ஆயிரத்துக்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் முன் பணம் அனுப்பி [illegible] வெளிநாடுகளுக்கு [illegible]

[illegible] "பகுத்தறிவு" காரியாலயம், 14, மவுண்ட்ரோட், சென்னை

(4-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இருக்கின்ற செல்வர்கள் அதிகாரிகள் வீட்டுப் பெண்களெல்லாம்தளர்ந்து அடிக்கடி நோய்வாய்ப்பட்டு அல்லலுறுகின்றனர். வெளியேபோய் வெயிலும்காற்றும்மேலேபட உழைக்கும் ஏழைப் பெண்மணிகள் ஆற்றல் மிக்குடையாராய் நோயற்ற வாழ்க்கையாகிய குறைவற்ற செல்வத்தை அடைந்து இன்புறுகின்றனர். வயல்களிலும் தோட்டங்களிலும் கூலிவேலை செய்கின்ற பெண்கள் தாம் வேலை செய்து கொண்டிருக்கும் போதே பிள்ளையைப் பெற்று வீட்டிற்கு எடுத்துக்கொண்டு போவதைக் காண்கின்றோம். இதற்குக்காரணம் அவர்கள் வெளியில் உலாவி வேலை செய்து வருவதே. செல்வர்கள் வீட்டுப் பெண்கள் மிக வருந்தியும் பிள்ளை பெற மாட்டாமல் கலவி மருத்துவரை யழைத்து வந்துபிள்ளை பெறுகிறார்கள்; சில வேளைகளில் பிள்ளைகளை வெட்டி எடுக்கவேண்டியகொடுஞ்செயலும் நிகழ்கின்றது. இதற்குக்காரணம் அவர்கள் ஒரு வேலையும் செய்யாமல் வீடடங்கிப் பொன் போலவும் பூப்போலவும் இருந்த இடத்திலேயே இருப்பதுதான். மேலும் செல்வர் வீட்டுப் பெண்களும் அவர்களுடைய தாய்மாரால் அடிக்கடி ஏவப்பெற்றுக் கருவுயிர்க்கும் வரை வீட்டு வேலைகளையாவது செம்மையாகச் செய்துவரும் பெண்கள் கருவுயிர்ப்பது அவ்வளவு துன்பந்தருவதாக இல்லை. இது உலகறிந்தஉண்மையே. ஆதலின் பெண்கள் ஆண்களைப்போல வெளியிடங்களில் உலாவி வேலை முதலியன பாராமலிருப்பதுதான் அவர்களுடைய உடலின் மென்மைத் தன்மைக்குத் தளர்ச்சியும் காரணமென்பது வெள்ளிடை மலைபோல் தெளிவாகிறது. இதனால்பெண்களும் ஆண்களைப்போலவே உடல்வலிநிலையுடையரென்பது பெற்றாம். ஆகையால் உடல் நிலை வேறுபாட்டால் பெண்மக்கள் ஆண்மக்களின் அடிமைகளாதற்குரியர் என்று கூறும் வழக்கு நிலையற்றொழிகின்றமை காண்க. இதனால் பெண்மக்கள் ஆண்மக்களுடன் சீரொப்ப உரிமைகளைப் பெற்று வாழ்வதற்கு உரிமையுடையரென்பதுநிலைபெறுகிறது.

மெய்க்காதல் மணம்பெற்றகணவனும்மனைவியும் உடனுயிர் நீங்கும் தனைத்தாய் நட்புடையராயிருப்பர். அவர்களில் காதலன் மனைவியின் உடல் பொருள் ஆவிக்குச் சொந்தமானவனே. அதைப்போலவே மனைவியும் கணவனுடைய உடல், பொருள், ஆவிக்குச் சொந்தமானவளே; அவ்வாறில்லாமல் தாய் தந்தையரால் தம் மனம்போல் மணம் முடிக்கப்பெற்று ஒற்றுமையும் அன்பும் இல்லாத கணவனுடல் மனைவிக்கும், அவளுடல் இவனுக்கும் சொந்தமாவதெங்ஙனம்? அதனால் ஆண்மகன் தன் உடல் வலிமையால் மனைவியை அடித்து மிதித்து வேசை வீடு புகுவதும், இவள் புன்வலி பொறுக்கமாட்டாமல் நம் தலைவிதி என்று அழுது புலம்பியிருப்பதும் என்ன முறை? அடிபட்ட பெண்களுக்கே தன்னுணர்ச்சியில்லாமல் கணவர் எத்தனை தீயநடையுடையவரா யிருந்தாலும் தாம் ஒழுங்காகத் துன்பப்பட்டுக் கொண்டிருப்போமென்ற மனநிலைதான் இருக்கிறது. கணவன் வருவதற்கு எவ்வளவு நேரமானாலும் தான் உண்ணாமல் பட்டினியிருக்கவேண்டும் என்பதும், கணவன் ஊரிலில்லையானால் அவன்வரும் வரைதான்பழையதுவதையாவது அரைவயிறுக் குறைவயிறாகவேதின்றிருக்க வேண்டுமென்பதும், அவன் நாய்போலத்தின்று அசிங்கமாக இலையைப் போட்டிருந்தாலும், நாய் கூட முகர்ந்து பார்க்காத அந்த எச்சிலிலையில்தான் தான் உண்ணவேண்டுமென்பதும், தற்காலத்தமிழ் நாட்டுப் பெண்கள் பெரும் பாலாரின் கொள்கையாக இருக்கிறது. இதற்கு இணங்காத பெண்கள் அடுத்தபெண்களாலும் மாமன் மாமியாராலும் அவ்வாறு[illegible]கட்டாயப்படுத்தப்பெறுகிறார்கள்பரிதாபம், பரிதாபம்; இவ்விதமானஇழிந்தவாழ்க்கைகளினின்றும்பெண் மக்கள்விடுதலைபெறல்வேண்டும். ஓரிலையில்உண்ணுதல் முதலியன அன்பின் பெருக்குக்கு அறிகுறி யென்று கூறலாம். அன்பின் பெருக்கிற்கு கணவனும் மனைவியும் ஒரே இலையில் உடனிருந்துண்ணட்டும். இல்லையானால் மெய்யன்புடன் கணவன் உண்டபின் உண்ணட்டும். இதற்காக தாய் தந்தையரால் வற்புறுத்தப்பெற்று மெய்யன்பில்லாமலேயே கணவனும் மனைவியுமானபோது அப்பெண்மணி தன் எண்ணத்திற்கு மாறாக வற்புறுத்தப்பெறுதல் பரிதாபமே. இவ்வித இழிந்த மன நிலையுடைமையாலும் பழக்கத்தாலும் பெண்மணிகள் பலர் கணவனில்லாமல் உண்ணுமைக் காரணத்தாலும் நோயுற்ற கணவனுடைய எச்சிலை யுண்பதாலும் நோய் வாய்ப்பட்டுத் துன்புறுகின்றனர். இம்மன நிலை முழுதும் ஆரியர் பழக்கத்தாலேயேபரவியன. இவை ஒழிந்து தற்காப்பு மனநிலையே பெண்கள் மனத்தில் அமைதல்வேண்டும் நிற்க;

இராவணன் போனவுடனே அரக்கியர் சீதையைத்துன்புறுத்தக்கண்ட வீடணன் மகளாகிய திரிசடை அவர்களை அடக்கி தான் கண்ட ஓர் கனவைச் சொல்லிப் பயப்படச் செய்து அவர்களைச் சீதையைப் பணிந்து மன்னிப்புக் கேட்கச் செய்கிறாள். சகோதரத் துரோகியாகிய வீடணனுடைய மகளாதலினாலேதான் இவள் இவ்வாறு நடந்துகொண்டாள் போலும்! இந்தத் திரிசடைகிழவும் கிழவியாக இருந்தனளாம். ஆனால், இராவணனோ வாலிபனாக இருந்தனன் என்று தெரியவருகிறது. இராவணனுடைய தம்பிமகளாக இக்கிழவி திரிசடை அமைவதெங்ஙனம்? மேலும் தன் தம்பிமகளைக் காவற்காரியாக இராவணன் அமைத்ததும் விளங்குமாறில்லை.

திரிசடைகூறியகனவினால்விளைந்த பயனும் ஒன்றும் காணோம். சீதை அதைச் செவி கொடுத்துக் கேட்டதாகவும் தெரியவில்லை. திரிசடை கனவு கூறியதற்கு அடுத்ததாக ஆரம்பிக்கும் சருக்கத்திற்கும், கனவு கூறிய சருக்கத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இருக்கிறதாகத் தெரியவில்லை. அது இராவணன் கூறிய கடுமையான சொற்களைக் கேட்ட சீதை மயங்கினாள் என்று தொடங்குகிறது. இதனால் அது இராவணன் சீதையை விட்டுச்சென்ற சருக்கத்திலிருந்து தொடர்புடையதாகவே இருக்கிறது. இதனால் வீடணன் இராமன் பக்கலில் நின்று அண்ணனைக் கொன்று பட்டத்திற்கு வந்த மகாபாதகமான செயலை மிகச் சிறந்த செயலாகக் கருதி வீடணனை வீடண ஆழ்வானாக்கிய பிற்கால மதவெறியராகிய ஆரியர்சிலரால் அவனுடைய மகள் அச்செயலைப் பற்றி முன்னரே கனவு கண்டாள் என்று கூறுமுகமாக எழுதவேண்டுமென்று எண்ணி இவ்விடத்தில் புகுத்திவைத்ததாகவே காணப்படுகிறது. ஆதலின் ஈதெல்லாம் ஒரு வழிப்பட்ட கதையாக இல்லாமல் முன்னுக்குப் பின் முரண்பட்டுத் தங்கள் தங்கள் மனம் போலப் பிற்கால ஆரியரால்மாற்றித் திருத்தப்பட்டே உள்ளது. இதுவே தற்கால வால்மீகி இராமாயணத்தின் நிலை. இதையே அறிஞராகிய சீனிவாசய்யங்கார் கூறினாரென முன்னர் எடுத்துக்காட்டினோம். இந்த இடம்மிகவும் பொருத்தமில்லாததாகமாறுபட்டு அமைந்துள்ளதென்பதை மற்றொரு மொழிபெயர்ப்பாளராகிய நடேசசாஸ்திரியார் பதிப்பாக த. கனகசுந்தரம்பிள்ளை சுந்தரகாண்டம் பக்கம்114-ல், "இதுவும்அடுத்தசருக்கமும்சிலபிரதிகளில்இல்லை. இவற்றில் முன்பின் பொருத்தமும் இல்லை, இவற்றை நீக்கிவிடுவதனால் கதைக்கு ஒரு குறைவு வருவதுமில்லை" என்று எழுதியிருக்கிறார். இவர் குறித்தவை சீதை புலம்பலும் அவள் கண்ட சுப சகுனங்களுமாக இருந்தாலும் மற்றும் நுணுகி ஆராய்ந்தால் திரிசடை கனவு கூறிய சருக்கங்களே பொருந்தா உரைகளாக இருக்கின்றன.

சீதை, "எவ்விதத்திலாவது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்னும் நீதிப்படி இராவணனுக்கு இணங்கி விடுவதா." என்று கூட நினைக்கிறாளாம்! பின்னரே மனம் அவனை நாடவில்லையெனக் கூறுகிறாள். மேலும், "நான் இராவணனியரைச் சாம்பலாக்குவேன். ஆனால் இராமனுக்கு இழுக்கு வருமென்று நினைத்தே சும்மா இருக்கிறேன்." என்று அவள் கூறினளாம். என்ன அழகான ஆழ்ந்த ஆலோசனை ஈது? ஆரியப்பெண்கள் மனநிலை எவ்வளவு தூரம் தாழ்ந்த நிலையினதாகப் பழக்கப் பெற்றிருக்கிறது?

"இராம! நீர் வணங்கும் கடவுள் நாராயணன் நான் வணங்கும் தெய்வமும் அவனே" என்றுசீதைபுலம்பினளாம். இராமனே நாராயணக்கடவுளின் தோற்றமாக இருக்க, வேறு நாராயணக்கடவுள் எது; நாராயணக் கடவுளாகிய இராமன்தன்னையேவணங்கினன்! என்னேபித்தலாட்டங்கள்! இதனால் இராமன் நாராயணனுடைய தோற்றமென்பது பொய்யாதல் வேண்டும்இல்லையானால்இராமனை நாராயணனை வணங்கியது பொய்யாதல் வேண்டும், இரண்டுமே பொய் என்பதும் ஈதெல்லாம் பிற்கால ஆரியர் இடைச்செருகலென்பதுமேஉண்மை என்பது அறிஞர் முடிவு;

சீதை இராமனைப்பற்றி "நீர் அயோத்தியில் பெண்களுடன் கூடி இன்புறுவீர்" என்று எண்ணினாள். இதனால் நாம் முன்னர் இராமன்பலமனைவியரைவைத்திருந்தவன் என்று கூறிய உண்மை நன்கு நிலைபெறுகின்றது. இத்தனை சான்றுகளுக்கும் மேல், சிலர் இராமன் ஒரு மனைவியையே உடையவன் என்று கூறுவரேல் அது பிடிவாதமேயாகும். உண்மையாகாது. இனி கம்பர் புரளியை ஆராய்வாம்.

திரிசடை கனவு நிலைகூறியதாக வால்மீகி இராமாயணத்தில் காணப்படும் செய்தி இராவணன் வந்து போன பின்னராக, கம்பரோ சீதையை அனுமானை காணுமுன் நிகழ்ந்ததாகக் கூறுகிறார். இதனை நாம் முன்னரே விளக்கினோம். திரிசடை சீதையோடு பேசினதாகக் காணப்படவேயில்லை. அவள் தனது கனவை அரக்கியரிடமே கூறினள். கம்பர் இதை மாற்றி அவள் சீதையிடம் மிகுந்த அன்புடையவளாக இருந்ததாகவும் தனது கனவைக்கூறி அவளைத் தேற்றியதாகவும் கூறினார். இது காட்சிப் படலத்தில் மேலும் சிந்தனைப்படலத்தில் கம்பர் இராவணன் போனவுடன் துன்புறுத்திய அரக்கியரைத் துரத்தித்திரிசடை "முன்னரே கனவு நீ கூறினேன், வருந்தற்க" எனச் சீதையைத் தேற்றினளெனக் கூறுகிறார். அரசாட்சியே இராவணனை விட்டு வீடணனிடம் சென்றதாகத் தன் கனவைத்திரிசடை கூறினள் என்பர் கம்பர்; சீதை புலம்பிய செய்தியினை அவர் வால்மீகி கூறுமாறு கூறவில்லை. இனி மேற் செல்லுதும்.

Beauty For Ladies!

பெண்களுக்கு

அழகான புடவை! உயர்ந்த பட்டில் பச்சை, புளு, வயலெட், கருப்பு, செம்பு, ஆரஞ்சி, ரோஸ், ஸ்டை கலர்கள். கரைக்கும் முந்திக்கும் பூவேலையினமுள்ள அதனமான புடவை.

18 முழம் × 2½ அகலம் ரூ. 4-0.

15 முழம் × 2½ அகலம் ரூ. 3-12.

The Madura Oriental Trading Co.,
Laxmi, Cloth Store, MADURA.

(3½)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த யாகத்தால் சகல சமூகம் ஒரு நன்மையுமடையாமல் ராஜ்ஜியம் பாழடைவதைப் பார்த்து சகியாமல் தமது அவர்களைத் தந்திரத்தால் கொன்றும் நாஸ்திகர்களென்று துரத்தியும் விவேகமற்ற ராஜாக்களின் உதவியால் அழித்தும் வந்த வரலாற்றையும் [illegible] உங்களுக்கே தெரியும். வேதவேள்வியை நிந்திப்பவர்களை குற்றம் சொன்ன திருஞான சம்பந்தர் தமிழ் அரசர்கள் அழிந்துபோகாமலிருப்பதற்கும் ஐகர் ஆவியைக்கண்டு தூசிபோல் ஓடாமலிருப்பதற்குமான ஒரு வழியைச் செய்து வைத்துவிட்டுப் போயிருந்திருப்பாரேயானல் அவர் சொன்னதும், அவர் மூன்று வயதில் கடவுள் பாலை உண்டதும் போற்றக்கூடியதே. முன் ஒரு ஊமையைப் பேச வைத்திருந்தால் இப்பொழுது எத்தனை ஆயிரம் ஊமைகளுக்கு எழுதவும், அரை குறையாகப் பேசவும் கற்றுக் கொடுத்தாய் விட்டது. முன் ஒரு குருடனுக்குக் கண் கொடுத்திருந்தால் இப்பொழுது எல்லாக் குருடர்களும் எழுதவும் படிக்கவும்கூடுமானவோர் ஒளியை உண்டாக்கி விட்டார்கள். ஒரு குருடன் வக்கீலாகக் கோர்ட்டில் பதிவு செய்யப்பட்டான் என்பதை நீங்கள் பத்திரிகையில் படித்திருப்பீர்கள். இதை உண்டுபண்ணின புத்திமான்கள் வேத வேள்வியைச் செய்ததுமில்லை, யாது, நிகோட்டினதுமில்லை, மூன்று வயதில் கடவுளிடம் திருவமுதுண்டதுமில்லை.

இந்த ராஜாக்களை எவ்விதத்திலும் யாகஞ்செய்யத் தூண்டின இதிகாசங்களிலுள்ள அநேக வாக்கியங்களில் கீழே ஒன்றை இன்னும் சொல்லுகிறேன். ஆசைப்பட்டுப் பொருளைச் சம்பாதித்துக் கர்மத்தைச் செய்வதைக் காட்டிலும் ஆசையை விடுவதுதான் பெரிது என்று வானப்ரஸ்தப் பிராமணர்கள் சொல்லுவதாய்க் கேள்விப்படுகிறோம். "ஓ! குந்தி புத்திரா! அதில் உன் மனதைச் செலுத்தாதே! கற்றோர்கள் கர்ம சாஸ்திர விதிப்படி திரவியங்களை யெல்லாம் ஒன்று சேர்த்துக் கொள்ளுகிறார்கள். மனதில்கெட்ட ஆசைகொண்டு யோக்கியம் அயோக்கியம் இவைகளின் பகுத்தறிவற்றவர்கள் தம் சரீரம் பொருள் முதலியவற்றை யோக்கியமான யாகத்திற்கு ஈடு செய்யாமல் அயோக்கிய விஷயத்திற்கு உபயோகிக்கிறார்கள். அவர்கள் தமக்கு நேரும் இவ்விதமான பெரிய தோஷத்தைத் தெரிந்துகொள்ளவில்லை. அவர்களுக்குசித்த சுத்தியுண்டாவது கஷ்டம். பிர்மதேவர் யாகத்திற்காகப் பொருள்களைச் சிருட்டித்தார். அவைகளைப்பாதுகாக்கும் மனிதனையும் யாகம் செய்பக்கருதியே நியமித்தார். ஆகையால்பொருள்களை யெல்லாம் யாகத்திற்கே உபயோகப்படுத்த வேண்டும். யாகம் செய்தால்உடனே வேண்டியதுசித்தி பெறலாம். தேவேந்திரன் யாகத்தில் ரத்தினங்களை தட்சிணையாகக் கொடுத்ததினால் இந்திர பதவியை யடைந்தான். தோலாடையுள்ளவரும் தேவர்களுக்குத் தேவருமான மகாதேவர் தன்னையே யாகத்தில் ஓமம் செய்து கொண்டதினால் தேஜசுள்ளவராகப்பிரகாசிக்கிறார்." இவ்விதஉபதேசங்களைக் கேட்டும் இந்தராஜா கொல்லன் உலையில் நாலு நல்ல பட்டாக்கத்தி கூர்மையோடு செய்வதில் அவனுக்கு என்ன லாபம்? யாகத்தில் எல்லா பாக்கியமும் வந்து இகலோக பரலோக சுகங்களும் கிடைத்துவிடுகையில்கொள்ளை, தொத்து நோய், பஞ்சம் முதலியவைகளில் பாவமும் பழியும், நஷ்டமும் வருவதை யாகம் ராஜாக்களை நினைக்கச் செய்யுமா? தேவர்களே! யாகத்தைச் சுற்றி காவல் செய்து கொண்டிருவர்கள், ஸாத்தியர்கள், பிதுர்க்கள், உருத்திரமூர்த்திகள், இவர்கள் ஆகாயக் கப்பலைப்போல் யாகத்தின் விசேடத்தால் ஆகாயத்தில் வட்டமிட்டுக் கொண்டிருக்கையில் ராஜ்யத்திற்குக் காவல் எதற்காக? யாகம் எல்லாவற்றையும் அளிக்கக்கூடியது. அந்த யாகத்தில் பிராமணர்கள் வாங்கும் அதிக தட்சணை, எதையும் தடுக்கக்கூடியது. அப்படியிருக்கையில்சமூக வாழ்க்கையையும் ராஜ்ஜிய நிலையையும் சரியானபடி ஏன் அனுசரிக்கப்படவேண்டும்? யாகத்தை நம்பியும் பிராமணனுக்குக் கொடுக்கும் புண்ணியத்தை நம்பியும் இந்த ராஜாக்களும் அவர்கள் ராஜ்ஜியங்களும் அழிக்கப்பட்டது.

வேற்றுமை ::

:. விருக்ஷம்

வேரோடு வீழ்க !

"இராமாயணத்தின் ஆபாசம்"

உலகத்தில் ஒரு சமூகத்தை மற்றொரு சமூகம் ஆழ்த்தி வைப்பதற்குரிய சான்றுகள் ஆழ்த்தும் சமூகத்திற்றான் காணப்படுவதுவழக்கம். ஆனல் தமிழ்மக்களை மிருகங்கள், குரங்குகள், பேய்கள், இராக்கதர்கள், கொடியவர்கள், குடிகாரர்கள், சோரம்புரிபவர்கள், கொலை நிகழ்த்துபவர்கள், அநாகரிகர்கள், வரன்முறை அற்றவர்கள், தாசி மக்கள், அடிமைகள், குருபிகள் என்ற வகையில் திரித்துக் கூற ஆரியர்கள் இராமாயணம் என்னும் ஒரு கட்டுக் கதையை வரைந்து, அது ஒரு மதியின் மிக்க ஆரிய முனிவனல் எழுதப்பட்டதென்று அதனைப் போற்றி, அண்ட முகடு முட்டும் வகையிற் புகழ்ந்து, அதற்கோர் மொழிபெயர்ப்பு போன்ற கம்ப.—இராமாயணத்தையும் வரைந்து இத் தென்னிந்தியாவில் புகுக்கியதும்; இத்தென்னிந்திய மக்கள் தம் இழிவையே அடிப்படையாகக் கொண்டு வரையப்பெற்ற இராமாயணத்தை ஓர் இதிகாசம் என ஏற்று அதனை மெய்யென்று நம்பி அவ்விதிகாசக் கதாநாயக நாயகிகளை தெய்வங்களாக ஏற்றதும் வருந்தத் தக்கதோர் உண்மையாகும். அறிவுடைய திராவிட மக்கள் சூழ்ச்சியில்மிகுந்த ஆரியக்கதையாம் இராமாயணத்தைநம்பி பார்ப்பன வலையிற் சிக்கியதற்குக்காரணம், சிந்திக்குந்தோறும் சிந்திக்குந்தோறும் எளிதில் தோற்றக்கூடியதாயில்லை.

என்றாலும் பொருள் காப்பாளன் அறிவிலும் வலிமையிலும் மற்றுமுள்ள எல்லாத் துறைகளிலும் மிகுந்த ஆற்றல் உடையவனாய் இருப்பினும், அறிவிலும் சீலத்திலும் குன்றிய ஓர் கள்வன், அப்பொருளை ஏகதேசம் கவர்ந்து செல்லுவதுபோல, அறிவுடைய நம் திராவிட மக்கள் இப்பார்ப்பன ஆபாசக் கதையாகிய இராமாயணக் கதையை ஏற்று மதிமோசம் போயினர். பார்ப்பன சூழ்ச்சியை பத்துக் கோடி முறை வலியுறுத்தினும், நாம் ஏமாற்றம் அடைந்தது, அடைந்ததான்.

எனவே, நம்மை இப்பார்ப்பனர்கள் இற்றை வரையில் ஆழ்த்தி அவர் நாகரிகத்தையும், ஒழுக்கத்தையும், கடவுள்களையும் நம்மவை என்று ஏற்று நடக்குமாறு செய்தற்கு இத்தகைய கதைகளே சீவ நாடிகளாய் இருக்கின்றன.

பார்ப்பன வேதங்களையும், வேதாந்தங்களையும் பார்ப்பனரே அறியாதவர்களாய் இருக்க, நம்மவர்கள் பெரும்பாலும் அறிவதற்கில்லை. நம்மவர்கள் தெய்வங்கட்கும்; சமூக ஒழுக்கங்கட்கும்; மற்றும் எல்லாவிதமான இயல்கட்கும் இப்பொழுது நமக்கு ஆதாரமாயுள்ளவை பார்ப்பனப் புத்தகங்களேயாம் என்பதில் தடையுளதோ? இல்லை.

எனவே, நாம் நம்முடைய உண்மை நிலைமையை அறியவும், பார்ப்பனர்கள் நம்மைத் தாழ்மைப்படுத்த இன்றுவரை நமமை அடர்ந்தாசுபுரியும் சூழ்ச்சி முறையைத் தெரிந்து அதனைக் கத்தரித்து சுயமரியாதை உணர்ச்சி படைக்கவும், இராமாயணத்தில் உள்ள ஆபாசங்களை 'இராமாயணத்தின் ஆபாசம்' என்னும் நூல் நமக்குக் கண்ணளிக்கும் என்பதில் ஐயமின்று.

இந்நூலில் நம் அரிய குடியரசில் வாரந்தோறும் வெளிப்போந்த கட்டுரைகளே மிளிர்வதனல், கட்டுரையாசிரியர் திரு: சந்திரசேகரப் பாவலரின் ஆராய்ச்சிக்கு, நாம் ஒரு ஆராய்ச்சி வெளியிடுதல் மிகையாகும்.

ஆதலின் உண்மை திராவிடமக்கள் தொடர்ச்சியாக நம் பதிப்பகத்தால் வெளியிடப்படும் 'இராமாயணத்தின் ஆபாசம்' என்னும் அரிய ஆராய்ச்சிநூலை வாங்கிப் படித்து உண்மை உணர்ந்து எதிரிகட்குத் தக்க ஆப்பிறத்துவது இன்றியமையாததாகும். விலை அணா 4.

கிடைக்குமிடம் மானேஜர், குடியரசு புத்தகாலயம்.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்:—

சர்: டோராப் ஜே. டாட்டா Kt.

மூலதனம்:

அனுமதிக்கப்பட்ட மூலதனம்	... ரூ.	6,00,00,000.
பதிவு செய்யப்பெற்ற ,,	... ரூ.	3,56,05,275.
வசூலான ,,	... ரூ.	71,21,055.

இதைப்பற்றி 1929 ஜூன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது:—"நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தைக் கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமையுண்டு."

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மேரைன், மோட்டார்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்களுக்கும் ஏஜென்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சு மானேஜர்,

4, முதல் லைன்பீச், சென்னை.

(28)

இதுவரையில் தமிழில் வெளிவராத புஸ்தகம்

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப் பயிற்சிமுறையும்"



விலை ரூபா 1—8—0

(தபால் சார்ஜ் வேறு)

வெளிநாட்டு ஆர்டர்களுக்கு முன் பணம் அனுப்ப வேண்டும்.

மோட்டார் ஸ்கூல் (1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)

இங்கு 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிஸம் கற்றுக்கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,

(11) மைலாப்பூர், சென்னை

குடி அரசு புத்தகாலயம்

வேதப்புரட்டை வெளியாக்கும்

ஞானசூரியன் 2-ம் பதிப்பு	...	0—8—0
இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம்		0—4—0
சுயமரியாதைப் பாடல்கள்.	...	0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு.	...	0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு	...	0—2—0
சோதிடப்புரட்டு	...	0—2—0
சாமிகளின் அடிமைகள்	...	0-12—0

8 அணாவுக்கு குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. 5 ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணமனுப்பவேண்டும்.

விலாசம்:—

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,

(எப்) 14, மவுண்ட்ரோட், மதராஸ்.

ஏழு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்தவைத்திய சங்க அமைச்சர்!! தமிழ் சித்த வைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர் !!! மூப்பு சேர்ந்த மருந்துகள்.

நீங்கள் என்று மழியாத இளமைப்பருவத்தை அடையவேண்டுமானால் பழனி சி. எம். சாமி

மகா வீரிய தங்க பஸ்பம் சாப்பிடுங்கள்

தாதுபுஷ்டியில் மன்மதனுக்கொப்பாவீர்கள். பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

தாது புஷ்டியில் சிறந்தது. மகான் அருளால் கிடைக்கப்பட்டது. வெள்ளை, வெட்டை, கடுப்பு, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், சூலை முதலிய வியாதிகளும் நீங்கும். அழிந்துபோன ஆண்மையையும் இழந்த பலத்தையும் இல்லற வாழ்வில் இன்பத்தையும் கொடுத்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வயோதிகனை வாலிபனாக்கி சதா பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடிய அபூர்வ சக்தி இதற்கிருப்பதால் இதன் அரிய குணத்தைக் கண்டு ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமில்லை. ஒரு முறை உபயோகித்தால் உண்மை விளங்கும்.

48 நாள் பஸ்பம் ரூபா 20—0—0. 24 நாள் பஸ்பம் ரூபா 10—0—0.

குரு அப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு.

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேக வெளுப்பை மாற்றி ரத்த விர்த்தியையும், தேக புஷ்டியையும் தரும். சகல மேகமும் க்ஷய ரோகமும் நீங்கும். தளுக்கற்றது. 24 நாள் புட்டி 1-க்கு ரூ.15.

குருதாளக பஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8-வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. 24 நாள் புட்டி 1-க்கு ரூ. 8.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

அந்நிய தேச வாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மகாலிங்கசாமி, சித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S.

ஜனங்களுக்குச் சந்தோஷத்தைத் தரும்

ஜனோபகாரி தைலம்.

இத்தைலமானது 27 வகை வன மூலிகைகளால் செய்யப்பட்டது. அநேக நற்சாட்சிகள் பெற்றது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"
நல்ல குளிர்ந்த வாசனையுள்ள தைலம்.

இத்தைலத்தால் தீரும் வியாதிகள்:—தீராத தலைக்கனம், ஓயாத மண்டையிடி, ஒருதலைக்குத்து, தலையரிப்பு, முடிகழிதல் இவைகளை நீக்கிக் கூந்தலை வளரச்செய்யும் காதிரைச்சல், காதடைப்பு, குத்தல், கண்வலி, எரிவு, கூச்சம், நீர்வடிதல், சிகப்பு விழுதல், நாசியிலிருந்து மஞ்சள்நிறத் தண்ணீர் வடிதல், ஓயாத் தும்மல், சிராபோல் விழுதல், வாய்க்கசப்பு, புளிம்பு, தூர்க்கந்த மடித்தல் முதலிய வியாதிகள்நீங்கி தேகத்திற்குச்சுகம்உண்டாகும். கண்டத்துக்குமேல் ஏற்படக்கூடிய 96 வியாதிகளும் தீரும்

பெரிய டின் ரூ. 1—12—0 } தபால் சார்ஜ் வேறு.
சிறிய டின் ரூ. 1—0—0 }

பார்ச வாய்வு மருந்து.

விதை வாய்வு, நரம்புத்தடிப்பு, வலி, வீக்கம் முதலிய விதை சம்மந்தமான சகல வியாதிகளுக்கும் இந்த மருந்தை உபயோகியுங்கள். பத்தியம் கிடையாது. பெண்கள் அண்டவாய்வுக்கும் உபயோகிக்கலாம்.

14 வேளை மருந்து ரூபா 1—0—0. தபால் சார்ஜ் வேறு.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளிநாட்டு நேயர்கள் வி. பி. செலவு சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும். நீங்கள் கடிதம் எழுதும்போது தெளிவாய் அச்செழுத்தைப்போல இங்கிலீஷிலோ, தமிழிலோ எழுதவேண்டும். சோல் ஏஜண்டுகள் தேவை விவரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளவும்.

உ. கா. நாகூர்மீரா அன் பிரதர்,
17-வது தெரு, ஏர்வாடி போஸ்டு,
திருநெல்வேலி ஜில்லா (தென்னிந்தியா.)

(41)

தமிழரசு

ஒரு புதிய அரிய வாரப் பத்திரிகை

சென்னையினின்று விரைவில் வெளிவரும்.

உலக முழுவதும் நடைபெறும் அரிய இனிய நிகழ்ச்சிகளை உள்ளபடி உணர்த்தும்; அறிவை வளர்க்கும் பெரிய உண்மைகளை அழகிய முறையில் தெள்ளிய செந்தமிழ் நடையில் நன்கு புகட்டும்; அரசியல் துறையில் தனக்குத் தோன்றியவற்றை அவா அச்சமின்றி எடுத்து உரைக்கும்; சமுதாய சீர்திருத்தத்தில் யாவரும் நன்மையடையத்தக்க கொள்கைகளைச் செவ்வனம் விளக்கும்; சமயக் கோட்பாடுகளை ஆராய்ச்சி முறையில் இனிது கூறும்; ஆசார சீர்திருத்தம், தத்துவஞானம், செந்தமிழ் அறிவு இவற்றைப் புதிய வகையில் எளிய நடையில் இனிய அமைப்பில் துலக்கும்; வியாபார நுணுக்கங்களை அவ்வப்போது விரிக்கும். வைத்திய நுட்பதிட்பங்களை வகுத்துக் காட்டித் தெரிக்கும்; இதனைப் படிப்போர் தமிழறிவு, சமயசாத்திர ஞானம், ஆசார சீர்திருத்த உண்மைகள், அரசியல் முறை, உலக நடை முதலியவற்றை ஒழுங்காக உணரலாம்.

இதன் ஆசிரியர் சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர் திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் பத்திரிகை உலகத்திலே அரிய பல கட்டுரை வரைந்து சிறந்து விளங்கும் டாக்டர் திருவாளர் எம். மாசிலாமணி முதலியார் அவர்களும் தேர்ந்த தமிழ்ப் புலவர்களும் ஆங்கில வித்துவான்களும் பிறரும் ஆராய்ந்து எழுதும் உயர்ந்த கட்டுரைகள் இதன்கண் திகழும்.

முந்துங்கள்! முந்துங்கள்!! முந்துங்கள்!!!

வேண்டுவோர் கீழ்வரும் விலாசத்துக்கு எழுதுவார்களாக.

வருட சந்தா | உள்நாடு ரூ. 3-0-0
| வெளிநாடு ரூ. 4-0-0

'தமிழரசு' காரிய நிலயம்,
31, வைத்தியநாத முதலி வீதி,
சென்னை.

(65)

சிகிஷ்சைக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சரிய நிவர்த்தி !!

சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சிதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஸ்டசுவாசம் மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த க்ஷணத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும் கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப்பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது.

48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டின் 1க்கு ரூ. 1—4.
தபால் கூலி அணா. 4. ஒரு டஜன் டின் விலை ரூ. 9-0-0.
6 டின் விலை. ரூ. 5-4-0. 3 டின் விலை ரூ. 3-0-0.
F. M. S. முதலியவைகளுக்கு முன் பணம் ரூ. 2-8-0.
இல்லாத ஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது.
புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,
[illegible]

உயர்வும் உத்திரவாதமுமுள்ளது!
உலகப் பிரசித்தி பெற்ற

மாயவரம் R. ரு. கிருஷ்ண அண்டு கோ.,

ஸத்குரு சிங்கச் சந்தனாதித் தைலம் பிருங்காமலகத் தைலம்
அரைக்கீரை விதைத் தைலம்

முதலியவைகளே! உங்கள் கண்ணுக்கும் மூளைக்கும் குளிர்ச்சியைத் தந்து திரேக ஆரோக்கியத்திற்கு குணம் தரத்தக்கது.

இவைகளைப் பல வருஷங்கள் அநுபவமுடைய தேர்ந்த நிபுணர்களால் உயர்ந்த பச்சிலை மூலிகைகளைக் கொண்டு ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இவைகளை ஸ்நானம் செய்து வருவதால் சிரசைப்பற்றிய நோய்களைப் போக்கி திரேகத்திற்கு குளிர்ச்சியையும், நறுமணம் புகழும் சுகந்த பரிமள வாசனையையும் கொடுக்கத்தக்கது.

அநேக பெரிய மனிதர்களாலும், டாக்டர்களாலும், பத்திரிகாசிரியர்களாலும், தேசிய மாபெரும் தலைவர்களாலும் உபயோகித்துச் சிபார்சு செய்யப்பட்டவை.

ஒரேமுறை பரிட்சியுங்கள், பரிட்சைக்கு உத்திரவாதமுள்ளது.

மலாய்நாட்டில் கிடைக்குமிடம்:—
பி. கோவிந்தசாமி பிள்ளை,
48-50, சிரங்கன் ரோடு,
சிங்கப்பூர்.

ஆர். சந்தானகிருஷ்ணன்,
ஷாப் அண்டு சந்தனக்கடை,
மாயவரம்.

திரு. ஜே. எஸ். கண்ணப்பர் அவர்களால் சென்னை "திராவிடன்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.